# தமிழ்நாடு பாடத்திட்ட வரைவு

## தமிழ்

### முன்னுரை

*'பழையன கழிதலும் புதியன புகுதலும்*
*வழுவல கால வகையினானே '*

காலந்தோறும் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப மொழியிலும் புதுமைகள் புகுத்தப்பட வேண்டும். மொழியில் ஏற்படும் மாற்றங்கள், மொழிப்பாட நூல்களிலும் வகுப்பறைகளிலும் எதிரொலிக்க வேண்டும்.

உலகில் வாழும் ஒவ்வொருவரும் தாம் வாழும் சமூகத்தினையும் பண்பாட்டினையும் அறிந்துகொண்டு வாழ்வது இன்றியமையாதது. அவ்வாறு அறிந்துகொண்டு வாழ்வதற்குக் கருவியாக மொழி விளங்குகிறது. மனிதர்கள் தங்களது எண்ணத்தையும் கருத்தையும் வெளிப்படுத்தி, பிறருடன் கருத்துத் தொடர்பு கொள்ள மொழியை ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றனர். சமூகவாழ்வு தொடர்ந்து நடைபெற வேண்டுமானால், கருத்துத் தொடர்பு மிகவும் தேவையானதொன்றாகும். மொழி இன்றேல், மக்கள் சமூகமாக இயங்க இயலாது. எனவே, அனைவரையும் ஒன்றுபடுத்துவதற்கு மொழி ஒரு பாலமாக விளங்குகிறது.

எந்த ஒரு மொழியும் சமூகத்தால்தான் வளர்ச்சியுறும். எந்த ஒரு சமூகமும் மொழியால்தான் வளர்ச்சியுறும். பல்வேறு வகையான கொள்கைகள், சமயங்கள், பொருளாதார ஏற்றஇறக்கங்கள், தொழில்கள் ஆகியவற்றால் வேறுபட்டிருப்பினும், தாம் பேசும் மொழியால் அனைவரும் ஒன்றுபட்டு விளங்குகின்றனர். இத்தகைய சிறப்புவாய்ந்த மொழி, கல்வி ஏற்பாட்டில் முதலிடம் பெறுவது வியப்பிற்குரியதன்று.

### தமிழ்மொழி

நந்தம் தமிழ்மொழி, பல்லாயிரமாண்டு பழைமையுடையது. இலக்கிய, இலக்கண வளங்கள் நிரம்பப் பெற்றது. காலந்தோறும் வளர்ந்து வரினும், இளமைமாறாத் தன்மை கொண்டது. முன்னைப் பழைமைக்கும் பழைமையாய், பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் விளங்குவது. பாட்டும் தொகையும் பெற்று விளங்கிய தமிழ், இன்று பன்முக தமிழாய், புத்துலகின் பயன்பாட்டிற்கும் ஏற்ற தமிழாய் மிளிர்கின்றது.

நமது முன்னோர் தமிழுக்கு அளித்த எண்ணற்ற இலக்கியக் கொடைகளை இளமையிலிருந்தே மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தியும் இலக்கிய நயமுணர்ந்து சுவைத்தலில் ஈடுபடுத்தியும் இலக்கியச்சுவையில் திளைக்கும் ஆற்றலையும் அவர்களிடம் வளர்த்துவிட்டால், அவர்கள் தாமாகவே பிற இலக்கியங்களைத் தேடிக் கற்கும் ஆர்வத்தைப் பெறுவர். அவ்வாறு கற்கும் இலக்கியங்கள் வாயிலாக நமது மொழி, இலக்கிய, பண்பாட்டு வரலாற்றைப்பற்றித் தெளிவாக அறிந்துகொள்வர்.

### தமிழ் இலக்கிய வளம்

புறநானூறு முதலான சங்க இலக்கியங்கள் வாயிலாகப் பண்டைத்தமிழரின் வீரம், கொடைச்சிறப்பு, படைமாட்சி, வாழ்க்கைமுறை, ஆட்சிமுறை, சமய நிலைகள், கலைகள் ஆகியனவற்றை அறிய முடிகின்றது. இலக்கிய ஆசிரியர்களின் படைப்புகள் யாவும் 'தொட்டனைத்தூறும் மணற்கேணி போல்' பயிலுந்தோறும் புதுப்புது பொருள்களைச் சுரந்து இன்பமூட்டும் ஊற்றுகளாகும். இவற்றைக் கற்கக் கற்க கற்பனையாற்றலும் முருகுணர்ச்சியும் பெருகும். 'இலக்கியம் வாழ்க்கையின் கண்ணாடி! ஒரு மொழியின் இலக்கியம் என்பது அம்மொழி பேசும் மக்களின் வாழ்க்கையே!

**மொழியும் நடைமுறை பயன்பாடும்**

அன்றாட வாழ்க்கையில் மொழி பயன்படாத துறைகளே இல்லை. மொழியைக் கற்கும் மாணவர்கள், மொழிவாயிலாக எளிய பொருள் குறித்துத் தெளிவாகப் பேசவும், ஒரு பொருளைப்பற்றிக் கேட்கவும், கேட்டுப் பொருளுணரவும், தெளிவான முறையில் படிக்கவும், படித்துப் பொருளுணரவும், எழுதவுமான திறன்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.தொடக்கநிலையிலிருந்தே இத்தகைய திறன்களைக் கையாள்பவர்கள், சமூகச் செயல்பாடுகளில் வெற்றி காண்பர். மக்களாட்சி நிலவும் நம் நாட்டில், ஒரு சிறந்த குடிமகனாக விளங்குவதற்குத் தெளிவான சிந்தனை, தெளிவான பேச்சு, தெளிவான எழுத்து ஆகிய திறன்கள் இன்றியமையாது வேண்டப்படுவனவாகும்.

மொழி வெறும் தகவல் பரிமாற்றக் கருவி மட்டுமன்று. மொழியின் பன்முக தன்மைகளை (அமைப்பு, அழகியல், இலக்கிய, சமூகப் பண்பாட்டு, உளவியல் கூறுகள்) ஆய்ந்தறிய வேண்டியது இன்றியமையாதது.

தமிழ்ப் பாடத்திட்டம்

மொழியின் பரிமாணத்தை முழுமையாக நோக்கவேண்டும் என்ற இந்திய மொழிகள் கற்பித்தலுக்கான நிலைப்பாட்டுத் தாள் குறிப்பிட்டுள்ள கருத்தினையும் தேசியக் கலைத்திட்டம் (NCF–2005) வழங்கியுள்ள வழிகாட்டும் நெறிமுறைகளையும் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டிற்கான தமிழ்ப் பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## தேசியக் கலைத்திட்டம் ( NCF–2005) வழிகாட்டும் நெறிமுறைகள்

- பள்ளிக்கு வெளியில் உள்ள வாழ்க்கையுடன் அறிவைத் தொடர்புபடுத்துதல்.
- கற்றல், மனப்பாடம் செய்யும் முறைகளிலிருந்து மாறிவருகிறது என்பதை உறுதிபடுத்துதல்.
- பாடப்புத்தகத்தை மையப்படுத்தாமல், குழந்தைகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை மையப்படுத்துதல்.
- தேர்வுமுறைகளை நெகிழ்வுடையதாக்கி ஒருங்கிணைந்த வகையில் வாழ்வோடு இணைத்தல்.
- நாட்டின் சனநாயகப் பன்முக தன்மைக்குள் புறந்தள்ளாமல் தனித்துவத்தை வளர்த்தல்.

## தொடக்க நிலை (1 – 5வகுப்புகள்)

குழந்தைகள் அவரவர் வாழ்க்கைச் சூழலுக்குட்பட்டு தமது தாய்மொழியில் வல்லமை, உச்சரிப்புத் திறன், வாக்கியங்களின் அமைப்பு பற்றிய அறிவுடன்தான் பள்ளிக்கு வருகின்றனர். மொழியைப்பற்றிய அடிப்படைப்புரிதலும், உரிய இடங்களில் அதைச் சரியாகப் பயன்படுத்தும் திறமையும் அவர்களிடம் உள்ளன. குழந்தைககளிடம் காணப்படும் இத்தகு மொழிப் புதையலை கற்றலுக்கான அடிப்படையாகக் ஏற்றுக்கொள்வதோடு தொடக்கநிலை மொழித் திறன்களைப் படிப்படியாக ஒருங்கிணைத்து செழுமைப்படுத்தி வளர்த்தெடுக்கும் செயல்பாட்டை உறுதிசெய்தலே மொழிக்கல்வியின் முதற்படியாகும்.

**·பாடப்பொருள்**

தமிழ், தமிழர் வாழ்வியல், பண்பாட்டியல் சார்ந்த கருத்துகளை மொழிப்பாடத்தின் மையமாக அமைத்தல். தமிழ், தமிழர்வாழ்வு, தமிழ்மரபு, தமிழ்ப்பண்பாடு, தமிழ்க்கவிஞர்கள், தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள், தமிழ்நாட்டு வெற்றியாளர்கள்,

உலகறிந்த தமிழர்கள், நாட்டுப்புறப் பாடல்கள் இவை சார்ந்த கருத்துகள்; நாள்தோறும் சந்திக்கும் சமுதாயப் பிரச்சினைகள், பெண் முன்னேற்றம், தமிழகத்தில் பெண் விடுதலை, மகளிர் முன்னேற்றச் செயல்கள், பால் பாகுபாடுகளைக் களைதலில் பங்காற்றிய, தலைமையேற்றவர்கள், நிகழ்ந்த மாற்றங்கள், நல்லிணக்கம் சார்ந்த கருத்துகள், வாழ்க்கையைச் சிறப்புடனும் வெற்றியுடனும் வாழத் தூண்டும் செய்திகள் ஆகியவை பாடப்பொருளாக இடம்பெறும். மொழியறிவின்வழியே வளர்க்கப்படும் தேடல், பண்பாட்டுப் பரிமாற்றங்களுக்கான வேர்களைக் கண்டடையும் ஊக்கத்தைத் தரும். தமிழர்தம் வாழ்வுடன் பிறமொழி பேசும் மக்களின் வாழ்க்கை நிகழ்வுகள், அவர்களுடன் நல்லிணக்கம் பேண வேண்டிய அவசியம் குறித்தும் கருத்துகள் அமையும். எவ்விதச் சார்புகளுமற்ற தன்மையுடன் பாடப்பொருள் வடிவமைக்கப்படும்.

தமிழ் இலக்கணத்தை பயன்பாட்டு அடிப்படையில் அறிமுகம் செய்யப்படும். இலக்கணத்தைச் சுமையாகவும் புரியாத ஒன்றாகவும் கருதும் மனநிலையிலிருந்து குழந்தைகளை விடுவித்து இலக்கணம் கற்றல் ஆர்வத்துடன் கற்கும் செயலாக மாற்றப்படும்.

படம், கதை, பாடல், செய்யுள், உரையாடல், சொற்போர், கடிதம், நாடகம், கட்டுரை ஆகிய வடிவங்களில், குழந்தைகள் விரும்பும் வகையிலும், அவர்களின் கருத்தைக் கவரும் வகையிலும் பாடப்பொருள் உருவாக்கப்படும்.

பெற்ற மொழியறிவை நடைமுறை வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தி அறியும் திறனை வளர்க்கும் வகையிலும், மரபு சார்ந்த பாடப்பொருள்களைக் கற்பிக்கும்பொழுது, எது சரி, தவறு என்று அவற்றை அறிவியல் கண்ணோட்டத்துடனும் திறனாய்வு நோக்குடனும் அணுகும் ஆற்றலை மாணவர்களிடம் மேம்படுத்தும் வகையிலும் பாடப்பொருள் உருவாக்கப்படும்.

கணினிவாயிலாகக் கற்பதற்கான வாய்ப்புகளுடன் கணினித் தமிழைக் கற்கும் வகையிலும் பாடப்பொருள் அமைந்திருக்கும்.

குழந்தைகளின் எண்ணன்களை, ஆர்வங்களை, விருப்பங்களை, ஆளுமையை வளர்க்க அரசு, அரசு உதவிபெறும் பள்ளிகள், பதின்மப் (மெட்ரிக்) பள்ளிகள், ஆங்கிலோ–இந்தியன் பள்ளிகள், கீழ்த்திசைப் (ஓரியண்டல்) பள்ளிகள் ஆகிய அனைத்துவகைப் பள்ளி மாணவர்களும் ஒத்தவகையில் மொழித்திறனைப் பெறும் நோக்கில் இப்புதியப் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்பாடத்திட்டத்தின் வாயிலாக, தொடக்கநிலை வகுப்பினை நிறைவுசெய்யும் மாணவர் தம் தாய்மொழி (அ) முதல் மொழியில் கவனத்துடன் கேட்டுப் புரிந்து கொள்ளவும், பிழையின்றிப் பேசவும், படிக்கவும், எழுதவும், எண்ணங்களை இயல்பாக வெளிப்படுத்தவும் என உரிய வகையில் மொழியை ஆளும் திறன் பெறுவர். பத்தாம் வகுப்பை நிறைவுசெய்யும் மாணவர் மொழியின் இனிமையையும் சிறப்பையும் உணர்ந்து சுவைக்கவும் ஆளவும் படைக்கவும் திறன் பெற்றிருப்பர். இந்த மொழிப்பயன்பாடு தாய்மொழிக்கற்றலுடன் கற்பித்தலுடன் மட்டும் நின்றுவிடாமல் பிற பாடங்களான அறிவியல், சமூக அறிவியல், கணக்கு உள்ளிட்டவற்றுடன் இணைத்துக் கற்பிக்கும் வகையிலும் அப்பாடங்களைக் கற்பதற்கான அடிப்படை மொழிக்கூறுகளை மொழிப்பாடம்

வழங்கும் வகையிலும் அமைந்திருக்கும். மாற்றுத்திறனுடையோர், கற்றலில் பின்தங்கியுள்ளோர் ஆகியோருக்கு ஊக்கமூட்டி திறமைகளை வெளிக்கொணரும் வகையில் பாட நூல் அமைந்திருக்கும்.

**தமிழ்ப் பாடத்திட்டத்தின் சிறப்புக் கூறுகள்**

- தாம் கேட்கும் செய்திகளை உள்வாங்கிக் கொண்டு செயல்படுதல், கேட்ட, படித்த செய்திகளின் மையக்கருத்தைப் புரிந்து கொள்ளல், சிந்தித்துப் பேசுதல், கருத்துத் தொடர்புடன் எழுதுதல் ஆகிய அடிப்படைத் திறன்களைப்பெற பாடத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

- உயர்நிலை மொழியாற்றல்களான மையக்கருத்தறிதல், வினா உருவாக்குதல், வினாவிற்கேற்ற விடையளித்தல், குறிப்பெடுத்தல், பகுத்தல், தொகுத்தல், வகைப்படுத்துதல், விவரித்தல், வெளிப்படுத்துதல், இதழ் தயாரித்தல், நாட்குறிப்பு எழுதுதல் ஆகியவற்றை வளர்க்கும் வகையிலும் அமைந்துள்ளது
- நாள்தோறும் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சிக்கல்களைச் சந்திக்கும்வகையில் படிவங்கள் நிரப்புதலுக்கும், விண்ணப்பங்கள் எழுதுதலுக்கும் பாடத்திட்டத்தில் வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன
- குழந்தைகள் மொழிவாயிலாகக் கற்பனைத் திறனை மேம்படுத்தவும், தானே கற்கவும், நடைமுறை இலக்கணத்தைப் புரிந்து பயன்படுத்தவும் பாடத்திட்டம் வழிவகுத்துள்ளது
- படைப்புத்திறன்களான கதை, கவிதை, கட்டுரை, உரையாடல், நாடகம் ஆகியவற்றை உருவாக்கும் திறன்களை வளர்ப்பதாய் அமைந்துள்ளது
- மொழியில் மேற்கொள்ள வேண்டிய செயல்திட்டங்களும் பாடத்திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன

**நோக்கங்கள்**

பாடப்புத்தகங்களில் காணப்படும் பாடப்பொருளை அறிவாகக் கருதாமல், கற்றல் கற்பித்தல் வழியாகவும் சுய அனுபவப் பகிர்வுகளாலும் ஏற்பட்ட கட்டுமானத்தை அறிவாகக் கருத, இப்பாடத்திட்டம் வழிவகை செய்யும்.

- குழந்தைகளை மையப்படுத்தியதாக அமைக்கப்பட்டுள்ளது..
- குழந்தைகளின் இயல்புகளையும் எல்லைகளையும் அங்கீகரிப்பதாக வடிவமைக்கப்பட்டுள்ளது..
- மாணவர்களை வெற்றுப் பாத்திரமாகக் கருதும் நிலை தவிர்க்கப்பட்டிருக்கும்.
- மாணவரின் உடல்திறம், உணர்வு நலம், செயல்திறன் போன்றவற்றை வளர்ப்பதாக அமைக்கப்பட்டுள்ளது..
- சிந்திப்பதற்கும் படைப்பூக்கத்திற்கும் வாய்ப்பளிக்கும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது
- இன்றைய நடைமுறைக்குப் பொருத்தமாகவும் நாளைய தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ளது
- செய்திகளை அறிவாக உருமாற்றம் செய்ய வழிகாட்டுவதாக அமைக்கப்பட்டுள்ளது.

- பல்வேறு துறைகளைப் பற்றி அறிந்துகொள்ள வாய்ப்பளிப்பதாக அமைக்கப்பட்டுள்ளது.
- நெகிழ்ச்சித் தன்மையுடையதாக, சனநாயகச் சூழலுக்கேற்றதாக அமைக்கப்பட்டுள்ளது.
- சிறந்த நல்லியல்புகள், சமூகப் பண்புகள், மனிதநேயம், வாழ்வியல் திறன்கள் ஆகியவற்றை வளர்ப்பதன் வாயிலாகச் சுமூகமாக வாழ்வதற்கும் சவால்களையும் சிக்கல்களையும் எதிர்கொள்வதற்கும் தேவையான ஆற்றலை வலுப்பெறச் செய்வதாக அமைக்கப்பட்டுள்ளது
- குழந்தைகளின் கற்றல்சுமையையும் மன அழுத்தத்தையும் குறைக்கும் நோக்கில் பொருளுணர்ந்து, தாமே செய்துபார்த்து, விவாதித்து, உற்றுநோக்கி, உரையாடி, சிந்தித்து, கண்டறிந்து வெளிப்படுத்த வாய்ப்புகளை வழங்குவதாக அமைக்கப்பட்டுள்ளது
- குழந்தைகள் பட்டறிவு வாயிலாகத் சமூகநீதி, சமத்துவம், மதச்சார்பின்மை முதலிய மதிப்புகளைச் செழுமைப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது

**மதிப்பீடு**

மதிப்பீடு, மாணவர்களை அச்சம், சோர்வுக்கு உள்ளாக்குவதாக இல்லாமல் அவர்கள் இன்று சந்திக்கும் மன அழுத்தத்தைக் குறைக்கும் வகையிலும் ஊக்கம்பெற்றுக் கற்றுக்கொள்ள உதவும்வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- மொழித்திறன்களைச் சோதிப்பதாகவும், மொழி வாயிலாகக் கற்றுக் கொண்டவற்றைச் சோதிப்பதாகவும் அமைந்திருக்கும்.
- ஏற்கெனவே அறிந்ததிலிருந்து புதியனவற்றிற்கு விடை காணக்கூடியதாகவும் அமைந்திருக்கும்.
- சிந்தனையைத் தூண்டுவதாக அமைந்திருக்கும்.
- தாங்களாகவே கற்றுணரும் தன்மையைப் பெறும்வகையிலும், சுயமாகச் சிந்திக்கும் திறனைப் பெறும்வகையிலும் அமைந்திருக்கும்.
- கற்றுக்கொண்ட திறன்களை மேலும் வளர்ப்பதாகவும் அமைந்திருக்கும்.
  பாடப்பொருள் அனைத்தையும் படித்திருக்கிறாரா என்று சோதிப்பதைவிட, மொழிப் புலமை பெற்றிருக்கிறாரா என்பதை உறுதிபடுத்தும் வகையில் மதிப்பீடு வடிவமைக்கப்பட்டுள்ளது.
- தொடக்க வகுப்புகளில் மொழியின் அடிப்படை திறன்களையும் உயர் வகுப்புகளில், மொழி ஆளுமைத் திறனையும் பெறும் வகையில் அமைந்திருக்கும்.

**தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு**

தமிழ்நாட்டில் தற்போது தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு நடைமுறையில் உள்ளது. இம்முறையின் சிறப்புத்தன்மை, "மாணவர்களின் கற்றலைத் தொடர்ந்து சோதித்து அவர்களின் கற்றலில் ஏற்படும் குறைகளை நீக்கி கற்றல் மேம்பாட்டிற்கு உதவுவதாகும். மேலும் கல்விச் செயல்களை மட்டுமல்லாது கல்வி இணைச் செயல்களையும் வாய்மொழி, எழுத்து, செயல்கள் என அனைத்து வகைகளிலும் முழுமையாக மதிப்பீடு செய்யப்படுகிறது. இம்மதிப்பீட்டு முறை மேலும் வளப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்படும்.

## தொடக்க நிலை

## மொழிப்பாடவழி வளர்க்கப்பட வேண்டிய திறன்கள்

1.கேட்டல்

2.பேசுதல்

3.படித்தல்

4.எழுதுதல்

5.நடைமுறை இலக்கணமறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதல்

6.கற்கக் கற்கும் திறன்கள் ( தானே கற்றல்)

7.சொற்களஞ்சியப் பெருக்கமும் சொல்லாட்சித் திறன்களும்

8.படைப்புத் திறன்கள்

9.விழுமியங்களை உணர்ந்தறிந்து பின்பற்றுதல்

10.வாழ்வியல் திறன்களை உணர்ந்தறிந்து பின்பற்றுதல்

# பாடத்திட்டம்
# தொடக்க வகுப்புகள் ( 1 – 5 )

| திறன் | முதல் வகுப்பு | இரண்டாம் வகுப்பு | மூன்றாம் வகுப்பு | நான்காம் வகுப்பு | ஐந்தாம் வகுப்பு |
|---|---|---|---|---|---|
| 1.கேட்டல் | •எளிய, கேட்டறிந்த சொற்களமைந்த, ஓசை நயமிக்க பாடல்களைக் கவனத்துடன் கேட்டுப் புரிந்து கொள்ளுதல்/ இரசித்தல் | •எளிய, கேட்டறியாத சொற்களமைந்த பாடல்களைக் கவனத்துடன் கருத்தூன்றிக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல் / •படங்கள்/ ஓவியங்கள் கதைப்படங்களை நுட்பமுடன் உற்று நோக்கல்/ இரசித்தல் | •பாடல்களையும், கதைகளையும் கவனத்துடன் கருத்தூன்றிக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல்/அவற்றின் மீதான கருத்தினை/ நோக்கினை வெளிப்படுத்துதல் | •ஓசைநயமும் கருத்தும் மிக்க பாடல்கள், புதிர்க் கதைகளைக் கேட்டுப்புரிந்து கொள்ளுதல் •எளிய உரைகளைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல் | •எளிய விழிப்புணர்வு பாடல்கள், சிந்தனையைத் தூண்டும் கதைகளைக் கேட்டுப்புரிந்து கொள்ளுதல் |
| | •எளிய படக்கதைகளைப் கவனத்துடன் பார்த்தும் சொல்லக் கேட்டும் புரிந்து கொள்ளுதல்/ இரசித்தல் | •எளிய கதைகளைக் கவனத்துடன் கருத்தூன்றிக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல் | •சூழலில் நடைபெறும் உரையாடல்களையும் வசனங்கள், வருணனைகள், விவரிப்புககளைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல் | • சூழ்நிலையில் உற்றுக்கேட்ட பல்வேறு விவரங்களைப் புரிந்து கொண்டு வெளிப்படுத்துதல் | •நாடகம், வசனங்கள் உரைகள் முதலியவற்றைக் கேட்டுப் புரிந்துக்கொள்ளுதல். |
| | •எளிய கட்டளைகள், அறிவுரைகளைக் கேட்டுப் புரிந்து கொண்டு அதற்கேற்பச் செயல்படுதல் | •வாய்மொழி வேண்டுகோள் களையும் அறிவுரைகளையும் கட்டளைகளையும் வினாக்களையும் கேட்டுப் புரிந்து கொள்ளுதல்/ எதிர்வினையாற்றுதல் | •வாய்மொழியிலான புதிர்கள், சொல் விளையாட்டு விதிமுறைகளைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல் | •தொடர் வாய்மொழிக் கூற்றுகளை விடுகதைகளையும் கேட்டுப் புரிந்து கொள்ளுதல் | •சொற்போர், கலந்துரையாடல் ஆகியவற்றைக் கேட்டுப்புரிந்துக் கொள்ளுதல் |
| | •ஒத்த வயதினரின் உரையாடலையும் எளிய தகவல்களைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல் | •பிறர் பேசுவதைப் பொறுப்புடனும் கவனத்துடனும் கேட்டல் | •வானொலி தொலைக்காட்சி செய்திகளைக் கேட்டுப் புரிந்து கொள்ளுதல் | •பிறர் கூறுவதை கவனமுடன் கேட்டல் / வினாக்கள் எழுப்புதல் அதன் மீதான தங்கள் கருத்துகளை/எதிர் வினைகளை வெளிப்படுத்துதல், | எளிய செயல்திட்டங்களைக் கேட்டுப் புரிந்து செயல்படுதல் |

| திறன் | முதல் வகுப்பு | இரண்டாம் வகுப்பு | மூன்றாம் வகுப்பு | நான்காம் வகுப்பு | ஐந்தாம் வகுப்பு |
|---|---|---|---|---|---|
| 2.பேசுதல் | •தன் பெயர், குடும்பத்தினர் பெயர், ஊர்ப்பெயர், நண்பர்களின் பெயர்களைக் கூறுதல் | •ஒலிநயமிக்க பாடல்களை தனியாளாகவும் குழுவாகவும் உரிய ஒலிப்புடன் பாடுதல் | •அறிந்த, கேட்ட கதைகள், தகவல்களைக் கலவைத் தொடரில் பேசுதல் | •இடைநிறுத்தமின்றி இயல்பாகத் தொடர்ந்து பேசுதல் •எளிய வருணனை சொற்களைக் கலந்து பேசுதல் •தெளிவாகப் பொருள் விளங்க ஒப்புவித்தல் | •பல்வேறு பாடல்களை அறிந்து பாடுதல் •அறிந்த, எளிய தலைப்புகளில் இயல்பாகவும் சரளமாகவும் பேசுதல் |
| | •எளிய, சந்தநயமுள்ள பாடல்களை அபிநயத்துடன் குழுவாகவும், தனியாகவும் பாடுதல்/ ஒப்புவித்தல் •பாடல், கதை, படக்கதை ஆகியவற்றை இனக்காணுதல். | •படக் கதையைப் பார்த்து நிகழ்வைக் கூறுதல். •தகவல் சேகரிக்கும் பொருட்டு வினா எழுப்புதல் •பார்த்த/ கேட்டவற்றைப் பற்றிப் பேசுத்சல் | •பாடல்களை இசையுடன் உரிய உணர்ச்சியுடன் பாடுதல். •கேட்டுணர்ந்த கதைப் கதை/ பாடல்களின் தலைப்புகள், கதாபாத்திரங்கள் பற்றி கேள்விகள் கேட்கவும், விவாதிக்கவும் கருத்துகளை வெளிப்படுத்தவும் செய்தல் | •கதைகள்,பாடல்களைத் தங்கள் சொந்த நடையில், தாம் விரும்பும் வகையில்தம் கருத்துகளையும் இணைத்துச் சொல்லுதல் •விடுகதைகளுக்கு விடை கூறுதல் | •கேட்ட, படித்த பகுதியின் மையக்கருத்தினைக் கூறுதல் •கேட்ட, படித்த பல்வேறு இலக்கியங்கள் பற்றி பேசுதல், விவாதித்தல், பகுப்பாய்வு செய்தல் |
| | •படத்தைப் பார்த்து உரையாடுதல், கதை கூறுதல் · விவரங்கள் அறிய வினா எழுப்புதல் •கேட்டறிந்தவற்றைப் பேச்சில் வெளிப்படுத்துதல் | •கேட்ட/ படித்த படல், கதைகளிலிருந்து கேட்கப்படும் எளிய வினாக்களுக்கு முழுமையான சொற்றொடரில் விடை கூறுதல். | •அறிமுகமான, தன்னைச் சுற்றியுள்ளவை சார்ந்த செய்திகளையும் விவரங்களையும் சரியான ஒலிப்புடனும், தங்கு தடையின்றியும் விவரித்துக் கூறுதல், | •பல்வேறு படைப்புகளின் தலைப்புகள் சூழல், கதைமாந்தர்கள், பற்றி, பேசுதல், தனிப்பட்ட கருத்துகளை வெளிப்படுத்துதல். | •சூழலில் நடக்கும் பல்வேறு நிகழ்வுகளுக்கு எதிர்வினை புரிதல் •சூழ்நிலைகளையும் நிகழ்ச்சிகளையும் விவரித்தல் |

| திறன் | முதல் வகுப்பு | இரண்டாம் வகுப்பு | மூன்றாம் வகுப்பு | நான்காம் வகுப்பு | ஐந்தாம் வகுப்பு |
|---|---|---|---|---|---|
| | •எண்ணங்களையும் தேவைகளையும் பேச்சில் வெளிப்படுத்துதல்/ சொந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் | •சொற்கள், தொடர்களைச் சரியாக உச்சரித்தல் •கேட்ட கதை, பாடல்களைத் தம்சொந்தக் கற்பனையின் அடிப்படையில் கூறுதல்/ சொந்த நடையில் பேசுதல் | •கேட்கும்/ படிக்கும் கதை, கவிதை/ செய்திகள் ஆகியவற்றைப் புரிந்துகொண்டு தங்கள் கருத்துகளால் வளப்படுத்துதல். | •எளிய வகுப்பறை விவாதங்கள், கலந்துரையாடலில் பங்கேற்றல் | •படித்த, கேட்ட கருத்துகள் பற்றி விவாதிக்கவும் வினாக்கள் எழுப்பவும் தம் கருத்துக்கு/ க்கத்திற்கு ஆதரவாக விளக்கமளித்தல். |
| | •ஒத்த வயதினருடன், ஆசிரியர்களுடன் தன்னைச் சுற்றியுள்ளவை பற்றி உரையாடுதல் | •கேட்டவற்றுடன் சொந்த அனுபவங்களைத் தொடர்பு படுத்தி பொருள் விளங்கும்வகையில் தெளிவாக வெளிப்படுத்துதல்/ •வினா எழுப்புதல். | •பண்புடன் உரையாடுதல். | தேசிய மாநில அளவிலான, சமூக, உணர்வு பூர்வமான செய்திகளை இனக்கண்டு அவற்றின்மீது விவாதம் செய்தல். | •நாடகங்கள், சொற்போர் போன்ற நிகழ்வுகளில் பங்கேற்றுப் பேசுதல். •மொழியின் நுட்பமான கூறுகளைக் மனதிற்கொண்டு தங்களுக்கான சொந்த மொழி நடையைக் கட்டமைத்தல் |

| திறன் | முதல் வகுப்பு | இரண்டாம் வகுப்பு | மூன்றாம் வகுப்பு | நான்காம் வகுப்பு | ஐந்தாம் வகுப்பு |
|---|---|---|---|---|---|
| 3.படித்தல் | **படிப்பதற்கான முன் பழகு செயல்கள்** வேறுபாடு அறிதல் •படங்களை நுட்பமாக உற்று நோக்குதல். அளவு, வண்ணம், வடிவம் ஆகியவற்றிற்கிடையே உள்ள ஒப்புமை, வேற்றுமைகளை அறிதல். | •மொழியின் அனைத்து உச்சரிப்புகளையும் அறிந்து பயன்படுத்துதல் | •தெளிவான உச்சரிப்புடன் குறில் – நெடில், மயங்கொலிப் பிழைகளின்றிப் படித்தல் படித்தல் | •சிறு சிறு பத்திகளை நிறுத்தற்குறிகளுக்கேற்ப் படித்தல் | •செய்தி, நிகழ்ச்சி அறிவிப்புகள், நிகழ்ச்சி நிரல், அழைப்பிதழ்கள், துண்டு வெளியீடுகளைப் படித்துப் பொருளுணர்தல் |
| | •படங்களை இடமிருந்து வலம் நோக்கிப் பார்த்து பெயர் சொல்லுதல் •அச்சுப்பகுதியை உற்று நோக்கி, கருத்தை அனுமானம் செய்தல் | •சொற்களின் ஒலிவடிவ, வரிவடிவத் தொடர்புகளை இனங் காணல் | •எளிய தொடர்களைச் சரளமாகப் படித்தல் | •சிறு சிறு கதைகள், பாடல்களை உரிய ஒலிப்புடன் பொருள் விளங்கப் படித்தல். | •கதை, உரையாடல், நாடகம், கடிதம் ஆகியவற்றை உரிய உணர்ச்சியுடனும், குரல் ஏற்ற இறக்கத்துடனும் பொருள் விளங்குமாறு படித்தல் |
| | •தமிழ் எழுத்துக்களை இனங்கண்டு (ஒலி வடிவ, வரி வடிவத் தொடர்புகளை அறிந்து) சரியான உச்சரிப்புடன் படிக்க அறிதல். (உயிர் எழுத்துகள், மெய் எழுத்துகள், உயிர்மெய் எழுத்துகள் என்ற வரிசையில் எழுத்துகளுக்கிடையேயான ஒலி வடிவ, வரி வடிவத் தொடர்புகளை அறிதல்) | •எளிய சொற்கள், சிறு சிறு தொடர்களை உரிய ஒலிப்புடன் படித்தல். | •முற்றுப் புள்ளி, வினாக் குறி ஆகிய நிறுத்தக்குறியீடுகளை அறிந்து படித்தல். | •படிக்கும் பகுதியில் இடம்பெறும் பழமொழிகள், மரபுச் சொற்களை அறிதல் | •பத்திகளைப் படித்து அதிலிருந்து கேட்கப்படும் பல்வேறு வகையான வினாக்களுக்கு விடையளித்தல். •சொற்களின் பொருண்மையை அகராதிகளில் கண்டறிதல் |

| திறன் | முதல் வகுப்பு | இரண்டாம் வகுப்பு | மூன்றாம் வகுப்பு | நான்காம் வகுப்பு | ஐந்தாம் வகுப்பு |
|---|---|---|---|---|---|
| | • எழுத்துகளைத் தனியாகவும் சொற்களிலும் அடையாளம் காணுதல் •வடமொழி எழுத்துகளின் ஒலி, வரி வடிவங்களை அறிந்து வாசித்தல் | •எளிய சந்தப் பாடல்களைப் இசையுடன் படித்தல் | •சூழல் சார்ந்து, புதிய சொற்களின் பொருள் புரிந்து படித்தல். | •பத்திகளைப் படித்து வினாக்களுக்கு விடையளித்தல் | •எளிய பட விளக்கங்கள், எண் விவர அறிவிப்புகள், வரைபடங்கள் ஆகியவற்றைப் படித்து, பொருள் உணர்தல். |
| | •எழுத்துகளைச் சேர்த்து சொற்கள், சிறு சிறு தொடர்களைப் படித்தல் | •எளிய, சிறு சிறு படக்கதைகளைப் / பாடல்களைப் படித்தல் | •படிக்கும் பகுதியில் இடம்பெறும் புதிய சொற்களைச் சூழல் அடிப்படையில் புரிந்துகொண்டு பிறகு அதன் சரியான பொருளை அறிந்துகொள்ள முயலுதல் | •செய்தித் தாள்கள், சுவரொட்டிகள், அறிவிப்புகள், விளம்பரங்கள் ஆகியவற்றைப் படித்துப் புரிந்துகொள்ளுதல் | •செய்தித்தாள்கள், கதை நூல்கள் ஆகியவற்றைப் படித்தல். |
| | •ஒலிகள், சொற்கள் கொண்டு விளையாடி மகிழ்தல். •குறில் – நெடில், மயங்கொலிப் பிழைகளின்றி படித்தல். | •படிக்கும் பகுதியின் பொருளுணர்ந்து வினாக்களுக்கு விடையளித்தல் | •மூன்று ( அ) நான்கு தொடர்களைக் கொண்ட சிறு சிறு பத்திகளைப் படித்து வினாக்களுக்கு விடையளித்தல் | •தாங்கள் விரும்பும் நூல்களைத் தெரிந்தெடுத்து படிக்க ஆர்வம் கொள்ளுதல் •படித்தவற்றுடன் தங்கள் அனுபவத்தில் உணர்ந்தவற்றைத் தொடர்புபடுத்துதல் | •பல்வேறு துறை சார்ந்த சொற்களைப் புரிந்துகொண்டு பொருத்தமான இடங்களில் பயன்படுத்துதல் |
| | • எளிய சிற் சிறு சொற்களடன்கிய படக் கதைகளைப் படித்தல் •எழுதப்பட்ட/ அச்சடித்த சிறு பகுதியைப் படித்தல் | •விரும்பும் நூல்களைத் தேடிப் படித்தல் •படித்த பகுதியில் கேட்கப்படும் சிறு சிறு வினாக்களுக்கு விடையளித்தல் | •படிக்கும் பகுதியின் மொழி நுட்பங்களைப் (பெயர்ச் சொல், வினைச் சொல், பிரதிப் பெயர்ச் சொற்கள்) புரிந்துகொள்ள இயலுதல் | •ஒரே பொருண்மையுள்ள பல்வேறு சொற்களுக்கு இடையிலான நுட்பமான வேறுபாடுகளை அறிந்து பயன்படுத்துதல் | •உரைப்பகுதி / பத்தியைச் சொல்லக் கேட்டு உரிய நிறுத்தக்குறிகளுடன் எழுதுதல் •செய்யுள், பாடல்களை அடி பிறழாமல் எழுதுதல் |

| திறன் | முதல் வகுப்பு | இரண்டாம் வகுப்பு | மூன்றாம் வகுப்பு | நான்காம் வகுப்பு | ஐந்தாம் வகுப்பு |
|---|---|---|---|---|---|
| 4.எழுதுதல் | **முன் ஆயத்தப் பயிற்சி**<br>•தன் விருப்பம்போல் கிறுக்குதல்<br>•நேர்கோடு, வளைவுகோடு, சாய்வுகோடுகளை வரைதல்<br>•புள்ளிகளை இணைத்து நேர்க்கோடுகள், வளைகோடுகள் வரைதல். | •படங்களைப் பார்த்துப் பெயர்கள், சிறு சிறு தொடர்கள் (தெளிவாகவும் வரிவடிவம் சிதையாமலும்) எழுதுதல் | •உரிய வடிவத்தில், முறையான இடைவெளி விட்டு எழுதுதல். | •உரைப்பகுதி / பத்தியை உரிய நிறுத்தக்குறிகளுடன் எழுதுதல் | •பாடம் / துணைப்பாடங்களில் இடம்பெறும் இன்றியமையாப் பிரச்சனைகளை எழுத்துவடிவில் வெளிப்படுத்துதல் |
| | •உயிர் எழுத்து, மெய் எழுத்து, உயிர்மெய் எழுத்து, வடமொழி எழுத்து இவற்றின் ஒலி வடிவ, வரி வடிவத் தொடர்பு அறிதல்<br>•சொல்லிக்கொண்டே வரியொற்றி எழுதுதல் | •சொற்களைச் சொல்லக் கேட்டு எழுதுதல் | •செய்தி/ பத்தி / கதை / இதழ் ஆகியவற்றைப் படித்துப் பொருள் உணர்ந்து , கருத்து தெரிவித்தல், கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுதல் | •எளிய வருணனைச் சொற்களைப் பயன்படுத்திச் சிறு சிறு பத்திகளைச் சொந்த நடையில் எழுதுதல்<br>•பொருத்தமான நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்தி எழுதுதல் | •பல்வேறு சூழல்களுக்கேற்ப எழுதும்போது மொழியின் இலக்கணக் கூறுகளைப் புரிந்து கொண்டு, பொருத்தமான சொற்கள், தொடர்கள், பழமொழிகள், நிறுத்தற் குறிகளைப் பயன்படுத்தி கவனமாக எழுதுதல்.<br>-விண்ணப்பக் கடிதம் எழுதுதல்<br>-குறிப்புச் சட்டகத்தைப் பயன்படுத்தி கட்டுரை எழுதுதல்<br>-நாள்குறிப்பு எழுதுதல்<br>-நிகழ்வுகளை விவரித்து எழுதுதல் |

| திறன் | முதல் வகுப்பு | இரண்டாம் வகுப்பு | மூன்றாம் வகுப்பு | நான்காம் வகுப்பு | ஐந்தாம் வகுப்பு |
|---|---|---|---|---|---|
| | •சொற்களையும் சிறு சிறு தொடர்களையும் பார்த்து உச்சரித்துக்கொண்டே எழுதுதல் | •எளிய கதை, பாடல், பத்தியிலிருந்து கேட்கப்படும் வினாக்களுக்கு முழு சொற்றொடர்களில் விடையளித்தல் | •புதிர்கள், துணுக்குகளுக்கு விடை எழுதுதல் | •திருக்குறள், செய்யுள் பகுதிகளை அடி பிறழாமல் எழுதுதல் | •சுற்றுப்புறத்தி நடக்கும் நிகழ்வுகளை உற்று நோக்கி அவற்றிற்கான எதிவினைகளை எழுத்தில் பதிவு செய்தல் |
| | •இரண்டு அல்லது மூன்று எழுத்துச் சொற்களைச் சொல்லக் கேட்டு , குறில் – நெடில், மயங்கொலிப் பிழையின்றி எழுதுதல் | •சிறு சிறு தொடர்களைச் சொந்தமாக எழுதுதல்<br>•கேட்டவற்றை /படித்தவற்றை / சிந்தித்து உணர்ந்தவற்றைப் படங்களாகவோ, சொற்களாகவோ, தொடர்களாகவோ வெளிப்படுத்துதல் | •அறிந்த சொற்களைக் கொண்டு, சொந்த நடையில், நிறுத்தக் குறியீடுகள், எளிய வருணனைச் சொற்களைப் பயன்படுத்தி சிறு சிறு தொடர்கள் எழுதுதல் | **பல்வேறு நோக்கங்களுக்கேற்ப / சூழல்களுக்கேற்ப எழுதுதல்**<br>•உறவு முறைக் கடிதம் எழுதுதல்<br>•சிறு சிறு கட்டுரை எழுதுதல்<br>•புதிய பொருண்மைகளை உணர்ந்து தம் சொற்களில் (பேச்சில் / எழுத்தில்) பயன்படுத்துதல்<br>•கற்பனையாக கதை எழுதுதல்<br>•எழுதியவற்றைத் தாமே மதிப்பீடு செய்தல் | •தமது கற்பனையின் அடிப்படையில் கதைகள், பாடல்கள், கவிதைகள், கடிதங்கள் எழுதுதல். |

| திறன் | முதல் வகுப்பு | இரண்டாம் வகுப்பு | மூன்றாம் வகுப்பு | நான்காம் வகுப்பு | ஐந்தாம் வகுப்பு |
|---|---|---|---|---|---|
| 5. நடைமுறை இலக்கணம் | •ஒத்த ஓசையில் முடியும் சொற்களை இனங்காணல் | •ஒலி இயைபுச் சொற்களை உருவாக்குதல்<br>•ஒருமை, பன்மை (கள், க்கள், ங்கள் சேர்த்து எழுத அறிதல்) | •இன எழுத்துகளை அறிதல்<br>•வல்லினம், மெல்லினம், இடையினம் எழுத்துகளை அறிதல் (பெட்டிச்செய்தி)<br>•ஒருமை, பன்மை வேறுபாடு அறிதல் ( அது – அவை) | • ஐம்பால் வகைகளறிதல் – ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் அறிதல் | •சொற்றொடர் அமைப்புமுறை (எழுவாய், செயப்படு பொருள்) அறிதல் |
| | •குறில் நெடில் எழுத்துகளின் ஒலியளவு வேறுபாடு (மாத்திரை) அறிந்து பயன் படுத்துதல் | •பெயர்ச்சொற்கள், பிரதிப் பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள் அறிதல் | • இரு திணை அறிதல் (உயர்திணை, அஃறிணை) | • காலம் (இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் அறிதல்)<br>•எழுவாய், பயனிலை அறிமுகம்<br>-பெயர்ப் பயனிலை எ.கா. அவன் கண்ணன்<br>- வினைப் பயனிலை எ.கா. அவன் படித்தான்<br>-வினாப் பயனிலை எ.கா. அவன் யார்? | •மூவிடம் அறிதல் (தன்மை, முன்னிலை, படர்க்கை ) |
| 6.கற்கக் கற்றல் | •படத்தொகுப்பைப் பார்த்து உரையாடுதல் | •படக் கதைகளைப் பார்த்தறிந்து / படித்தறிந்து கதை கூறுதல் | •குழந்தைகளுக்கான படவிளக்க அகராதியைப் பயன்படுத்துதல் | •குழந்தைகளுக்கான எளிய அகரமுதலிகளைப் பயன்படுத்த அறிதல் | •எளிய அகரமுதலி பயன்படுத்துதல்<br>•செய்தித்தாள்கள், கதை நூல்கள் படித்தல் |
| | •பட / கதை நூல்களைப் பார்த்தும் படித்தும் மகிழ்தல் | •பெயர்ப்பலகைகள், சிறுவர்களுக்கான பெரிய எழுத்து சித்திரக் கதைகள் படித்தல் | •படக்கதைகளைத் தேடிப் படித்தல் | •கதை நூல்கள் படித்தல் | •இணையத்தில் தேடிப் படித்தல் |

| திறன் | முதல் வகுப்பு | இரண்டாம் வகுப்பு | மூன்றாம் வகுப்பு | நான்காம் வகுப்பு | ஐந்தாம் வகுப்பு |
|---|---|---|---|---|---|
| 7.சொற்களஞ்சியப் பெருக்கமும் சொல்லாட்சித் திறனும் | **கீழ்க்காணும் சொற்களைக் கேட்டும் படித்தும் அறிந்து, பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதல்**<br>•விலங்குகள் பெயர்கள்<br>•பறவைகள் பெயர்கள்<br>•வாகனங்கள் பெயர்கள்<br>•நிறங்கள் பெயர்கள்<br>•சுவைகள் பெயர்கள்<br>•கிழமைகள் பெயர்கள்<br>•தமிழ் மாதங்கள் பெயர்கள்<br>•எண் பெயர்கள்<br>•உறவுமுறைப் பெயர்கள்<br>•திசைகள் பெயர்கள்<br>•வடிவங்களின் பெயர்கள் | **கீழ்க்காணும் சொற்களைக் கற்றறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதல்**<br>•பெயர்ச் சொற்கள்<br>•வினைச்சொற்கள்<br>•எதிர்ச்சொற்கள்<br>•இரட்டைச் சொற்கள் (பள பள, மடமட..)<br>•எளிய வருணனைச் சொற்கள்<br>•ஆங்கில மாதங்கள்<br>•வீடு, பள்ளிகளிலுள்ள பொருள்களின் பெயர்கள்<br>•குடும்ப உறுப்பினர் பெயர்கள்<br>•காய்கள், பழங்கள் பெயர்கள்<br>•தின்பண்டங்களின் பெயர்கள் | **கீழ்க்காணும் சொற்களைக் கற்றறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதல்**<br>•உணவுப் பொருள்களின் பெயர்கள்<br>•ஆடை வகைகளின் பெயர்கள்<br>•<br>•மரம், செடி, கொடிகளின் பெயர்கள்<br>•பொது இடங்களின் பெயர்கள் ( பள்ளி, வங்கி, பேருந்து நிலையம், மருத்துவ மணை...)<br>•தன் ஊர், மாவட்டம், மாநிலம், நாடு ஆகியவற்றின் பெயர்கள்<br>•இன்றியமையா நபர்களின் (பெயர்கள் நாட்டின் பிரதமர், குடியரசுச் தலைவர், முதலமைச்சர், ஆளுநர், கல்வி அமைச்சர்...)<br>•பழமொழிகள்<br>•மரபுத் தொடர்கள்<br>**•சொற்களஞ்சியப் பெருக்கத்திற்காக படித்தல்**<br>•சிறுவர்களுக்கான பெரிய எழுத்து படக் கதைகள் | **கீழ்க்காணும் சொற்களைக் கற்றறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதல்**<br>•தொழிலாளர், தொழில்கள் பெயர்கள்<br>•முக்கிய நகரங்கள், ஊர்களின் பெயர்கள்<br>•இன்றியமையா இடங்களின் பெயர்கள் (இந்திய மாநிலங்கள், தமிழ்நாட்டின் மாவட்டங்கள்)<br>பழமொழிகள்<br>•மரபுத் தொடர்கள்<br>**•சொற்களஞ்சியப் பெருக்கத்திற்காக படித்தல்**<br>சிறுவர்களுக்கான பெரிய எழுத்து கதைகள் | **கீழ்க்காணும் சொற்களைக் கற்றறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதல்**<br>•பழமொழிகள்<br>•மரபுத் தொடர்கள்<br>•நேரிணை, எதிரிணைச் சொற்கள் பயன்படுத்துதல்<br>•பிற நாடுகள், உலகத் தலைவர்கள், இன்றியமையா இடங்களின் பெயர்கள்<br>•ஆங்கிலச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள்<br>**•சொற்களஞ்சியப் பெருக்கத்திற்காக படித்தல்**<br>•சிறுவர்களுக்கான இலக்கியங்கள் |

| திறன் | முதல் வகுப்பு | இரண்டாம் வகுப்பு | மூன்றாம் வகுப்பு | நான்காம் வகுப்பு | ஐந்தாம் வகுப்பு |
| --- | --- | --- | --- | --- | --- |
| 8.படைப்புத் திறன்கள் | •ஒத்த ஓசையுடைய சொற்களை உருவாக்குதல்<br>•ஒருமையை பன்மையாகவும் பன்மையை ஒருமையாகவும் மாற்றுதல்<br>•கொடுக்கப்பட்ட எழுத்துகளிலிருந்து சொற்களை உருவாக்குதல் | •முதல் எழுத்தை மாற்றி வேறு சொல் உருவாக்குதல்<br>•குறிப்பிட்ட எழுத்தில் தொடங்கும் பல்வேறு சொற்களை எழுதுதல்<br>• கொடுக்கப்பட்ட சொல்லிருந்து பல்வேறு சொற்களை உருவாக்குதல்<br>•சொல்லின் இறுதி எழுத்தில் தொடங்கும் சொல்லை (அந்தாதி) எழுதுதல். | •சொல் விளையாட்டுகளில் பங்கேற்றல்<br>•ஓரே சொல்லில் தொடங்கும், முடியும் பல்வேறு சொற்களை உருவாக்குதல்<br>•கதையின் முடிவை விருப்பம் போல மாற்றிக் கூறுதல்<br>•பாடலின் வரிகளைத் தொடர்ந்து பாடி முடித்தல்<br>( காகம் கா கா<br>கிளி கீ கீ<br>குயில் கூ கூ<br>………….<br>…………..<br>…………….) | •விளம்பரங்கள் உருவாக்குதல்<br>•அறிவுப்புகள், நிகழ்ச்சி நிரல் உருவாக்குதல்<br>•கதையைத் தொடர்ந்து கூறி முடித்தல்<br>( ஒரே ஒரு ஊரிலே<br>ஓரே ஒரு ……….<br>…………………..<br>…………………..)<br>•குறுந்தகவல்கள், நகைச்சுவைத் துணுக்குகள் உருவாக்குதல்<br>•பாடலின் வரிகளை மாற்றிப் பாடுதல்<br>•கற்பனைக் கடிதம் எழுதுதல் | •குறிப்புகளைக் கொண்டு கதைகளை உருவாக்குதல்<br>•பாதிக்கதையைத் தொடர்ந்து மீதிக் கதையைக் கூறி முடித்தல்<br>•பாடல் வரிகளை நீட்டிக் கொண்டே செல்லுதல்<br>•நிகழ்ச்சியைச் செய்தியாக்குதல்<br>•தலைப்புச் செய்தியை விரித்து எழுதுதல்<br>•விளம்பரங்கள், அறிவிப்புகள், முழக்கத் தொடர்கள் உருவாக்குதல்<br>•குறிப்பிட்ட தலைப்பில் கதை, கவிதை, உரை தயாரித்து வாசித்தல் |

| திறன் | முதல் வகுப்பு | இரண்டாம் வகுப்பு | மூன்றாம் வகுப்பு | நான்காம் வகுப்பு | ஐந்தாம் வகுப்பு |
|---|---|---|---|---|---|
| 9.விழுமியங்களை உணர்ந்து பின்பற்றும் திறன் | •காலந்தவறாமை<br>•விதிகளைப் பின்பற்றுதல்<br>•தூய்மை பேணுதல்<br>•பொருள்களைப் பாதுகாத்தல் | • காலந்தவறாமை<br>• விதிகளைப் பின்பற்றுதல்<br>• தூய்மை பேணுதல்<br>• பொருள்களைப் பாதுகாத்தல்<br>• பிறர்க்கு உதவுதல்<br>• பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல்<br>• கூட்டுணர்வு | • காலந்தவறாமை<br>• விதிகளைப் பின்பற்றுதல்<br>• தூய்மை பேணுதல்<br>• பொருள்களைப் பாதுகாத்தல்<br>• பிறர்க்கு உதவுதல்<br>• பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல்<br>• கூட்டுணர்வு<br>• நட்புணர்வு<br>• உண்மை பேசுதல்<br>• சேமிப்பு உணர்வு | • காலந்தவறாமை<br>• விதிகளைப் பின்பற்றுதல்<br>• தூய்மை பேணுதல்<br>• பொருள்களைப் பாதுகாத்தல்<br>• பிறர்க்கு உதவுதல்<br>• பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல்<br>• கூட்டுணர்வு<br>• நட்புணர்வு<br>• உண்மை பேசுதல்<br>• சேமிப்பு உணர்வு<br>• நேர்மை<br>• நன்றியுணர்வு<br>• தன்னம்பிக்கை | • காலந்தவறாமை<br>• விதிகளைப் பின்பற்றுதல்<br>• தூய்மை பேணுதல்<br>• பொருள்களைப் பாதுகாத்தல்<br>• பிறர்க்கு உதவுதல்<br>• பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுதல்<br>• கூட்டுணர்வு<br>• நட்புணர்வு<br>• உண்மை பேசுதல்<br>• சேமிப்பு உணர்வு<br>• நேர்மை<br>• நன்றியுணர்வு<br>• தன்னம்பிக்கை<br>• ஒற்றுமை<br>• விட்டுக் கொடுத்தல்<br>• நாட்டுப்பற்று<br>• விடாமுயற்சி<br>• மொழிப்பற்று<br>• உழைப்பு<br>• அறிவியல் மனப்பான்மை<br>• இயற்கையை நேசித்தல்<br>• சகோதரத்துவம் |

| திறன் | முதல் வகுப்பு | இரண்டாம் வகுப்பு | மூன்றாம் வகுப்பு | நான்காம் வகுப்பு | ஐந்தாம் வகுப்பு |
|---|---|---|---|---|---|
| 10.வாழ்வியல் தேர்ச்சிக்கான திறன்களை அறிதல் | • தன்னை அறியும் திறன்<br>• பிரச்சனை தீர்க்கும் திறன்<br>• முடிவெடுக்கும் திறன்<br>• கூர்சிந்தனைத் திறன்<br>• படைப்பாக்கச் சிந்தனைத் திறன்<br>• சிறந்த தகவல் தொடர்பு திறன்<br>• சுமுக உறவுக்கான திறன்கள்<br>• பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொல்ளும் திறன்<br>• உணர்வுகளைக் கையாளும் திறன்<br>• மன அழுத்தத்தைக் கையாளும் திறன் | • தன்னை அறியும் திறன்<br>• பிரச்சனை தீர்க்கும் திறன்<br>• முடிவெடுக்கும் திறன்<br>• கூர்சிந்தனைத் திறன்<br>• படைப்பாக்கச் சிந்தனைத் திறன்<br>• சிறந்த தகவல் தொடர்பு திறன்<br>• சுமுக உறவுக்கான திறன்கள்<br>• பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொல்ளும் திறன்<br>• உணர்வுகளைக் கையாளும் திறன்<br>• மன அழுத்தத்தைக் கையாளும் திறன் | • தன்னை அறியும் திறன்<br>• பிரச்சனை தீர்க்கும் திறன்<br>• முடிவெடுக்கும் திறன்<br>• கூர்சிந்தனைத் திறன்<br>• படைப்பாக்கச் சிந்தனைத் திறன்<br>• சிறந்த தகவல் தொடர்பு திறன்<br>• சுமுக உறவுக்கான திறன்கள்<br>• பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொல்ளும் திறன்<br>• உணர்வுகளைக் கையாளும் திறன்<br>• மன அழுத்தத்தைக் கையாளும் திறன் | • தன்னை அறியும் திறன்<br>• பிரச்சனை தீர்க்கும் திறன்<br>• முடிவெடுக்கும் திறன்<br>• கூர்சிந்தனைத் திறன்<br>• படைப்பாக்கச் சிந்தனைத் திறன்<br>• சிறந்த தகவல் தொடர்பு திறன்<br>• சுமுக உறவுக்கான திறன்கள்<br>• பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொல்ளும் திறன்<br>• உணர்வுகளைக் கையாளும் திறன்<br>• மன அழுத்தத்தைக் கையாளும் திறன் | • தன்னை அறியும் திறன்<br>• பிரச்சனை தீர்க்கும் திறன்<br>• முடிவெடுக்கும் திறன்<br>• கூர்சிந்தனைத் திறன்<br>• படைப்பாக்கச் சிந்தனைத் திறன்<br>• சிறந்த தகவல் தொடர்பு திறன்<br>• சுமுக உறவுக்கான திறன்கள்<br>• பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொல்ளும் திறன்<br>• உணர்வுகளைக் கையாளும் திறன்<br>• மன அழுத்தத்தைக் கையாளும் திறன் |

## உயர் தொடக்க நிலை (6 –8 வகுப்புகள்)

## மொழிப்பாடவழி வளர்க்கப்பட வேண்டிய திறன்கள்

### 1.அடிப்படை மொழித்திறன்கள்

- **கேட்டல்** : செய்யுளையும் உரை வடிவங்களையும் சொல்லக் கேட்டு / படிக்கக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல், புரிந்துகொண்டதை வெளிப்படுத்துதல்
- **பேசுதல்** : கேட்டவற்றின் பொருளுணர்ந்து பேச்சில் வெளிப்படுத்துதல்.சபையில் அச்சம், கூச்சமின்றி பேசுதல்.கேட்ட படித்த செய்திகளின்மீது வினாக்கள் எழுப்புதல்.வினாக்கள் எழுப்புவதன் வாயிலாகப் புதியவற்றை அறிந்து, புரிதலை மேம்படுத்திக்கொள்ளுதல். அனுபவங்களைச் சொந்த நடையில் பேசுதல்.
- **படித்தல்** : செய்யுளையும் உரை வடிவங்களையும் வெவ்வேறு வகையான கட்டுரை வடிவங்களையும் படித்தல் பொருளுணர்வுக்கு ஏற்றார்போல் உரிய ஒலிப்பு, குரல் ஏற்றஇறக்கம், நிறுத்தக் குறிகளுடன் உணர்ச்சி வெளிப்படப் படித்துக்காட்டுதல்.படித்த பகுதியின் பொருளுணர்ந்து பதிலளித்தல். .படித்த பகுதியின் மொழி நடையை இனங்காணல்.
- **எழுதுதல்** : செய்யுள், உரைநடைவழி கேட்டும், படித்தும் அறிந்தவற்றைத் தம் சொந்த நடையில் எழுதுதல். பல்வேறு சூழல்கள், நிகழ்வுகளின்போது பிறர் கூறியவற்றையும், தாம் பெற்ற அனுபவங்களையும் சொந்த நடையில் எழுதுதல்.

### 2.மொழிவழி தகவலறி திறன்கள்

- செய்யுள், உரை வடிவத்தின் மையக்கருத்து அறியும் திறன்.
- செய்யுளின் / உரைநடையின் பொருள் அறியும் திறன்
- செய்யுள், உரைநடை ஆகியவற்றில் இடம்பெறும் அருஞ்சொற்கள், புதிய சொற்களின் பொருள் அறியும் திறன்
- சொற்களுக்குரிய பொருளறிய அகராதியைப் பயன்படுத்தும் திறன்
- . படிக்கும் பகுதியை நுட்பமாக ஆய்ந்து சிறப்புக் கூறுகளைக் கண்டறியும் திறன்.
- செய்யுளின் நயம் உணர்ந்து போற்றும் திறன் (ஒலிநயம், சொல்நயம், பொருள் நயம்)
- படிக்கும் பகுதியில் இடம்பெறும் சொலவடைகள், செறிவான சொற்கள் / தொடர்களைக் கண்டறிந்து பொருள் உணர்ந்து போற்றும் திறன்
- செய்யுள் உணர்த்தும் அறக்கருத்துகள்/நீதி /நன்னெறி ஆகியவற்றை உணர்ந்து பின்பற்றும் திறன்.
- வருணனை, கற்பனை போன்றவற்றைப் புரிந்துகொள்ளும் திறன்.
- தொடர்புடைய கூடுதல் செய்திகளைப் பார்வை நூல்கள், அகராதி, கலைக்களஞ்சியம், தேசப்படப் புத்தகம், மற்றும் இணையதளம் ஆகியவற்றைப் பொருத்தமாகப் பயன்படுத்தி தொகுத்தறியும் திறன்.

    -ஆசிரியர் வரலாறு

    -நூல் வரலாறு

    -பின்புலம் – செய்யுள் தோன்றக் காரணம்

-பாடப்பட்ட காலம், சூழல்

-செய்யுள் நடை

-அதே புலவரின் வேறு செய்யுள் (அ) அதே கருத்தமைந்த வேறு செய்யுள்கள், வேறு புலவர்களின் செய்யுள், உரைகளைத் தேடிக் கற்கும் திறன்.

-கேட்டல் / படித்தல் வழியாகச் சொற்களஞ்சியம் பெருக்கும் திறன்.

**3.தொடர்பாடல் திறன்கள்**

- செய்யுளின் மையக்கருத்தைக் கூறுதல், எழுதுதல்.
- கேட்ட, படித்த பகுதியைப் புரிந்து, முன்னறிவுடன் இணைத்து உரையாடும் திறன்.
- கேட்ட, படித்த பகுதியைப் புரிந்து, முன்னறிவுடன் இணைத்து எழுதும் திறன்.

**4. சொற்களஞ்சியப் பெருக்கம் / மொழியாளுமைத் திறன்கள்**

- பேச்சிலும் எழுத்திலும் ஏற்புடைய சொற்களைப் பொருத்தமாகப் பயன்படுத்துதல்.
- பேச்சிலும் எழுத்திலும் ஏற்புடைய பழமொழி, உவமை, மரபுத் தொடர் ஆகியவற்றைப் பொருத்தமாகப் பயன்படுத்துதல்.
- பிறமொழிக் கலப்பின்றிப் பேசுதல் எழுதுதல்/ திறன்
- ஊடகங்களில் பார்த்த, கேட்ட, படித்த செய்திகளைச் சொந்த நடையில் பேசும் / எழுதும் திறன்
- உரிய ஒலிப்புடன், உரிய உணர்ச்சி வெளிப்பட, பொருளுணர்வுக்கு ஏற்றாற்போல் குரல் ஏற்ற இறக்கத்துடன் இலக்கிய வடிவங்களைப் படித்தல் / ஒப்புவித்தல்
- சொற்களஞ்சியத்தைப் பெருக்குதல், அறிந்த சொற்களைப் பேச்சிலும் எழுத்திலும் கையாளுதல்.
- படித்த, கற்ற பகுதிகளின் பொருண்மையைப் புரிந்து உரையாடலில், எழுத்தில் வெளிப்படுத்துதல்.
- பார்த்த ஓவியம், காட்சிகளின் அனுபவத்தை சொந்த சொற்களில் வெளிப்படுத்துதல்
- மொழியின் நுட்பங்களை அறிந்து பேசுதல்/ எழுதுதல்
- உரிய ஒலிப்புடன், உரிய உணர்ச்சி வெளிப்பட, பொருளுணர்வுக்கு ஏற்றாற்போல் குரல் ஏற்ற இறக்கத்துடன் தங்கு தடையின்றி, இயல்பாக, சொந்த நடையில், கொச்சை சொற்கள் நீக்கிப் பேசுதல்

- பொதுத் தமிழில், எழுத்துவழக்குச் சொற்களைப் பயன்படுத்தி, பிழைகளின்றி (சந்திப் பிழை, மயங்கொலிப் பிழை, குறில்/நெடில் பிழை, தொடர் பிழை /வாக்கியப் பிழை) உரிய நிறுத்தக் குறிகளுடன், படிப்பவர் தெளிவாகப் பொருள் உணரும்படி சொந்த நடையில் எழுதுதல்
- பேச்சு / எழுத்தின் நோக்கம், கேட்பவர்/ படிப்பவரின் நிலை ஆகியவற்றை மனதிற் கொண்டு பயன் விளையுமாறு தன்னை வெளிப்படுத்துதல்
- சொந்த அனுபவங்களை ( நாள்குறிப்பு, கடிதம், கட்டுரை…) எழுதுதல்
- பல்வேறு சூழலில் கேட்ட/ படித்த பல கலைகள் /பல துறைகள் சார்ந்த கலைச் சொற்களை அறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதல்
- சரியான சொல், தொடர், சொற்றொடர்களைப் பயன்படுத்தி பேசுதல் /எழுதுதல்
- வகுப்பறை, பள்ளி சுவரொட்டிகளில் எழுத செய்திகள் சேகரித்தல், உருவாக்குதல், தொகுத்தல்.

**எளிய தலைப்புகளில் பேசும் திறன்**
**எ.கா**

- உரையாடுதல்
- உரையாற்றுதல்
- கலந்துரையாடுதல்
- விவாதித்தல்
- அறிக்கை வாசித்தல்
- தொகுத்துரைத்தல்
- செய்யுளிள், உரை நயங்களை எடுத்துக் கூறுதல்
- வாய்மொழியில் தெளிவாக விண்ணப்பித்தல்
- நிகழ்வுகளை ஒருங்கிணைத்தல்
- அறிக்கை வாசித்தல்
- நிகழ்ச்சி வருணனை கூறுதல்
- நேர்காணல் நடத்துதல்
- நகைச்சுவை துணுக்குகள் கூறுதல்
- இலக்கியநயம் தோன்றப் பேசுதல்.
- செய்திகள், கருத்துகள், நூல்களை விமர்சித்தல்

**எளிய தலைப்புகளில் எழுதும் திறன்**
**எ.கா**

- உரையாடல்
- உரை
- கலந்துரையாடல்
- விவாதம்
- அறிக்கை
- கட்டுரை
- நகைச்சுவை துணுக்குகள் எழுதுதல்
- செய்யுள், உரை நயங்களை விவரித்து எழுதுதல்.
- இலக்கிய நயம் தோன்ற எழுதுதல்.
- எழுத்துமொழியில் தெளிவாக விண்ணப்பித்தல் (விண்ணப்பங்கள் நிரப்புதல் / எழுதுதல்)

**5.வாழ்வியல் மாட்சிமைக்கான திறன்களையும் (விழுமியங்கள் ) தேர்ச்சிக்கான திறன்களையும் (வாழ்வியல் திறன்கள்) அறிந்து பின்பற்றுதல்**

**விழுமியங்கள்**

- செய்யுள், உரைநடை, துணைப்பாடம், இலக்கணப் பகுதிகள்வழி அறிந்த தமிழ் மொழியின் இனிமை, சிறப்பு, பெருமை, தொன்மை, அருமை, சமுதாய நோக்கு, நல்லிணக்கம் போன்றவற்றை அறிந்து போற்றும் திறன்
- பிறருடைய மொழி,உணவு,வாழ்க்கை முறை அறிந்து ஒப்பிட்டுப் பேசுதல்.
- செய்யுள், உரைநடை, துணைப்பாடம், இலக்கணப் பகுதிகள்வழி நன்னெறிகளை உணர்ந்தறிந்து பின்பற்றுதல்

**வாழ்வியல் திறன்கள்**

மொழி கற்றல் வழியாக வாழ்வியல் தேர்ச்சித் திறன்களைப் பெறுதல்.

- தன்னை அறியும் திறன்
- பிரச்சனை தீர்க்கும் திறன்
- முடிவெடுக்கும் திறன்
- கூர்சிந்தனைத் திறன்
- படைப்பாக்கச் சிந்தனைத் திறன்
- சிறந்த தகவல் தொடர்பு திறன்
- சுமுக உறவுக்கான திறன்கள்
- பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொல்ளும் திறன்
- உணர்வுகளைக் கையாளும் திறன்
- மன அழுத்தத்தைக் கையாளும் திறன்

**6. படைப்புத் திறன்கள்**

- பாடல் கவிதைகளை நீட்டிச் செல்லுதல்
- சிந்தனை, கற்பனை வாயிலாக மனதில் உருவகித்து தனது பேச்சிலும் எழுத்திலும் வெளிப்படுத்துதல்
- மொழிப்பாடவழி அறிந்தனவற்றிற்கு (உரைநடை, கதை, நாடக வடிவில்...) மறு வடிவம் கொடுத்தல்.
- சிறு சிறு பாடல், கவிதை, கதை ஆகியவற்றைப் படைக்கும் திறன்.
- பல்வேறு புலப்பாட்டு உத்திகளையும் முறைகளையும் இனக்கண்டு படைப்புகளில் பயன்படுத்துதல்.

**7. திறனாய்வுத் திறன்கள்**

- ஒத்த கருத்துள்ள பிறபாடல் (அ) இலக்கியத்துடன் ஒப்பிடும் திறன்
- மொழிப்படவழி அறிந்தனவற்றைத் திறனாய்வு செய்யும் திறன்.
- படித்த கருத்து சார்ந்து தன்னுடைய விருப்பு வெறுப்பு, இசைவு, மாறுபாட்டை நுட்பமாக ஆய்வுசெய்து வெளிப்படுத்தும் திறன்.
- வெவ்வேறு உணர்ச்சிகரமான பாடப்பொருள் /பிரச்சனைகளைக் காரணகாரிய அடிப்படையில் ஆராய்ந்து கருத்துகளை வெளிப்படுத்தும் திறன்.
- இயற்கை சார்ந்த (அ) பிரச்சனைகள் தொடர்பாக தருக்க அடிப்படையில் முடிவுக்கு வருதல்
- கேட்ட / பார்த்த உள்ளூர் சமூக நிகழ்வுகள் செயல்பாடுகள், சடங்குகள் பற்றி வினா எழுப்புதல்/ விவாதித்தல்.

**8.மொழிபெயர்ப்புத் திறன்கள்**

- பாடப் பகுதியில் / வழக்கத்தில் / புழக்கத்தில் பயன்படுத்தும் பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை அறிந்து, பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துதல்
- சொற்கள், தொடர்கள், பத்திகளைச் சொந்தமாக மொழிபெயர்த்தல்.

**9.சொல்லாக்கத் திறன்கள்**

•காலத்தின் தேவைகளுக்கேற்பப் புதிய புதிய சொல்லாக்கங்களை மேற்கொள்ளுதல்/ உருவாக்குதல்

**10.புத்துலகிற்கான திறன்கள் (இதழியல், ஊடகம், கணினி, இணையம்சார் மொழித்திறன்கள்)**

•செய்தி, விளம்பரம், அறிவிப்பு, நிகழ்ச்சித் தொகுப்பு போன்றவற்றைக் கூறும் திறன்/ எழுதும் திறன்

•கணினி வாயிலாக மொழிசார் வளங்களைத் தேடிக் கற்கும் திறன்

•நோக்கங்களுக்கேற்ப செய்திகள் சேகரித்தல், உருவாக்குதல், தொகுத்தல் திறன்கள்

•செய்தி, விளம்பரம், அறிவிப்பு போன்றவற்றை உருவாக்கும் திறன்.

•தமிழில் தட்டச்சு செய்யும் திறன்.

•கையெழுத்து இதழ், ஆண்டு மலர் போன்றவற்றில் தம் படைப்புகளை வெளியிடும் திறன்.

•தம்முடைய படைப்புகளை இணையத்தில் பதிவேற்றம் செய்யும் திறன்.

**மேற்குறிப்பிட்ட திறன்களைக் கீழ்க்காணும் பொருண்மைசார் பாடப்பகுதிகளின் வாயிலாக உயர் தொடக்க நிலை மாணவர்களிடம் வளர்த்தெடுக்க வேண்டும்**

**பாட நூல் அமைப்பு முறை**

1. **பாடநூல் பகுப்பு –** முப்பருவ முறை
2. **பொருண்மைகள் –** பொருண்மைகளின் அடிப்படையில் பாடப் பொருள் வடிவமைக்கப்படும்

2. **இயல் –** ஒரு பருவத்துக்கு 3 இயல் என மூன்று பருவத்துக்கு மொத்தம் 9 இயல்.
3. **இயல் அமைப்பு –** ஒவ்வோர் இயலிலும் பொருண்மை சார்ந்த செய்யுள், உரைநடை, துணைப்பாடம் மற்றும் இலக்கணம், மொழிப்பயிற்சிகள் அடங்கும்.
4. **கற்றல் வெளிப்பாடுகள் –** மொழித்திறன்சார் வெளிப்பாடுகள், பொருண்மைசார் வெளிப்பாடுகள் என்னும் இரு வகைகளில் அமையும்.

## இலக்கணம்

| ஆறாம் வகுப்பு | ஏழாம் வகுப்பு | எட்டாம் வகுப்பு |
|---|---|---|
| •எழுத்து – வகை, தொகை (உயிர்– உய்ர்க் குறில், உயிர் நெடில்) மெய்யெழுத்துகள்– வல்லினம், மெல்லினம், இடையினம்) உயிர்மெய் – (உயிர்மெய்க் குறில், உயிர் மெய் நெடில் மொழி முதல், இடை, கடையெழுத்துகள் மயங்கொலி எழுத்துகள்.)<br>•இனஎழுத்துகள்<br>•சுட்டெழுத்துகள்<br>• வினா எழுத்துகள்<br>•மாத்திரை<br>•சார்பெழுத்து – 10 வகைகள் (உயிர்மெய், ஆய்தம் மட்டும் விரிவாக)<br>•சொல் – இலக்கண வகை (பெயர், வினை, இடை, உரி) இடுகுறிப்பெயர், காரணப்பெயர்<br>•பெயச்சொல்லின் வகைகள்<br>•அணிகள் (பாடநூலில், செய்யுளில் இடம்பெற்றுள்ளவை) | •குற்றியலுகரம்<br>•பகுபதம், பகாப்பதம்<br>•மூவகைப்போலி<br>•தொழிற்பெயர் – விகுதி பெற்ற தொழிற்பெயர் (தனியாக வைக்கலாம்)<br>•சொல் – இலக்கிய வகை (இயல், திரி, திசை, வட சொற்கள்)<br>•வினைமுற்று – குறிப்பு, தெரிநிலை<br>•எச்சம் – பெயரெச்ச வினை, வினையெச்ச வினை<br>•அணிகள் (பாடநூலில், செய்யுளில் இடம்பெற்றுள்ளவை) | •சார்பெழுத்து – 10 வகைகள், (குற்றியலிகரம் முதல் ஆய்தக்குறுக்கம் வரை விரிவாக)<br>•ஆகுபெயர் – அறிமுகம் (பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில்)<br>•வழக்கு – இயல்பு, தகுதி<br>•தொகைநிலை, தொகாநிலை – அறிமுகம்<br>•வேற்றுமை – விளக்கம், வகைகள் வேற்றுமைத்தொகை – (தொகை, தொடர், உடன்தொக்கதொகை)<br>•புணர்ச்சி – இயல்பு, விகாரம் அறிமுகம்<br>•யாப்பு– உறுப்புகள் ( எழுத்து, அசை,சீர், அடி) அறிமுகம்<br>•பா வகைகள் – அறிமுகம்<br>•அணிகள் (பாடநூலில், செய்யுளில் இடம்பெற்றுள்ளவை) |

## மொழித்திறன் பயிற்சிகள்

| பேச்சு<br>(உரிய ஒலிப்புடன், உரிய உணர்ச்சி வெளிப்பட, பொருளுணர்வுக்கு ஏற்றாற்போல் குரல் ஏற்ற இறக்கத்துடன் தங்கு தடையின்றி, இயல்பாக, சொந்த நடையில், கொச்சை சொற்கள் நீக்கிப் பேசுதல்) | எழுத்து<br>( பொதுத் தமிழில், எழுத்து வழக்குச் சொற்களைப் பயன்படுத்தி, பிழைகளின்றி (சந்திப் பிழை, மயங்கொலிப் பிழை, குறில் – நெடில் பிழை, தொடர் பிழை /வாக்கியப் பிழை) உரிய நிறுத்தக் குறிகளுடன் தெளிவாகப் பொருள் விளங்க சொந்த நடையில் எழுதுதல்) |
|---|---|
| குறிப்பிட்ட தலைப்பில் பேசுதல்<br>•உரையாடுதல்<br>•உரையாற்றுதல்<br>•கலந்துரையாடுதல்<br>•விவாதித்தல்<br>•அறிக்கை வாசித்தல்<br>•தொகுத்துரைத்தல்<br>•செய்யுளிள், உரை நயங்களை எடுத்துக் கூறும் திறன்.<br>•வாய்மொழியில் தெளிவாக விண்ணப்பித்தல் | குறிப்பிட்ட தலைப்பில் உரை எழுதுதல்<br>•உரையாடல்<br>•உரையாற்றல்<br>•கலந்துரையாடல்<br>•விவாதம்<br>•அறிக்கை<br>•கட்டுரை<br>•செய்யுள், உரை நயங்களை எழுதும் திறன்.<br>•எழுத்துமொழியில் தெளிவாக விண்ணப்பித்தல் (விண்ணப்பங்கள் நிரப்புதல் / எழுதுதல்) |
| நிகழ்வுகளை ஒருங்கிணைத்தல் | நிகழ்ச்சி நிரல் தயாரித்தல் |
| அறிக்கை வாசித்தல் | அறிக்கை எழுதுதல் |
| நிகழ்ச்சி வருணனை கூறுதல் | நிகழ்வறிக்கை தயாரித்தல் |
| நேர்காணல் நடத்துதல் | முழக்கத் தொடர்கள் எழுதுதல் |
| செய்திகள், கருத்துகள், நூல்களை விமர்சித்தல் | விமர்சனம் எழுதுதல் |

# உயர்தொடக்க வகுப்புகளுக்கான விழுமியங்கள்

| ஆறாம் வகுப்பு | ஏழாம் வகுப்பு | எட்டாம் வகுப்பு |
|---|---|---|
| அன்பு<br>நட்பு<br>ஒற்றுமை<br>உழைப்பு<br>விடாமுயற்சி<br>தன்னம்பிக்கை<br>நேர்மை<br>வாய்மை<br>மொழிப்பற்று<br>விதிகளைப் பின்பற்றுதல் | மொழியுணர்வு<br>நாட்டுப்பற்று<br>மனிதநேயம்<br>சமத்துவம்<br>சமயச்சார்பின்மை<br>இயற்கையைக் காத்தல்<br>பால் பாகுபடின்மை<br>பொதுச் சொத்துகளைப் பாதுகாத்தல்<br>தேசிய சின்னங்களை மதித்தல் | பிறர்க்கு உதவுதல்<br>நட்புணர்வு<br>கூட்டுணர்வு<br>உண்மை பேசுதல்<br>நாட்டுப்பற்று<br>சகிப்புத் தன்மை<br>தன்னலமின்மை<br>நடுவுநிலைமை<br>மொழிப்பற்று |

## உயர்தொடக்க வகுப்புகளுக்கான வாழ்வியல் திறன்கள்

| ஆறாம் வகுப்பு | ஏழாம் வகுப்பு | எட்டாம் வகுப்பு |
|---|---|---|
| • தன்னை அறியும் திறன்<br>• பிரச்சனை தீர்க்கும் திறன்<br>• முடிவெடுக்கும் திறன்<br>• கூர்சிந்தனைத் திறன்<br>• படைப்பாக்கச் சிந்தனைத் திறன்<br>• சிறந்த தகவல் தொடர்பு திறன்<br>• சுமுக உறவுக்கான திறன்கள்<br>• பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொல்ளும் திறன்<br>• உணர்வுகளைக் கையாளும் திறன்<br>• மன அழுத்தத்தைக் கையாளும் திறன் | • தன்னை அறியும் திறன்<br>• பிரச்சனை தீர்க்கும் திறன்<br>• முடிவெடுக்கும் திறன்<br>• கூர்சிந்தனைத் திறன்<br>• படைப்பாக்கச் சிந்தனைத் திறன்<br>• சிறந்த தகவல் தொடர்பு திறன்<br>• சுமுக உறவுக்கான திறன்கள்<br>• பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொல்ளும் திறன்<br>• உணர்வுகளைக் கையாளும் திறன்<br>• மன அழுத்தத்தைக் கையாளும் திறன் | •தன்னை அறியும் திறன்<br>•பிரச்சனை தீர்க்கும் திறன்<br>•முடிவெடுக்கும் திறன்<br>•கூர்சிந்தனைத் திறன்<br>•படைப்பாக்கச் சிந்தனைத் திறன்<br>•சிறந்த தகவல் தொடர்பு திறன்<br>•சுமுக உறவுக்கான திறன்கள்<br>•பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொல்ளும் திறன்<br>•உணர்வுகளைக் கையாளும் திறன்<br>•மன அழுத்தத்தைக் கையாளும் திறன் |

## மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை 6

## உயர்நிலை தமிழ் மொழிக்கல்விக்கான பாடத்திட்டம் (வரைவு)

மொழி மானுடத்தின் அடையாளம்; கருத்துப் பரிமாற்றத்துக்கான ஆற்றல் வாய்ந்த ஊடகம். ஒரு சமுதாயத்தின் அறிவு, பண்பாடு, வரலாறு, தத்துவம் ஆகியவற்றோடு இரண்டறக் கலந்ததாகவும் அவற்றின் கருவூலமாகவும் மொழி விளங்குகிறது. தனி மனிதர்கள் சிந்திக்கவும் படைப்பாக்கத் திறனைப் பெறுவதற்கும் மொழியே அடிப்படையாக அமைகிறது.

எல்லாக் குழந்தைகளும் இயல்பூக்கம் காரணமாகத் தாம் வாழும் சூழலில் மொழி அறிவைக் கற்றுக்கொள்ளத் தொடங்கினாலும், அதனை முறையாகத் திறம்பட வளர்தெடுப்பதில் பள்ளிக் கல்வி பெரும்பங்கு வகிக்கிறது.

உயர் நிலைக்கான தமிழ்மொழிக் கல்வி, மாணவர்கள் தாம் வெளிப்படுத்த விழையும் கருத்தைத் தங்கு தடையின்றிப் பேசவும், அதனைப் பிழையின்றி எழுதவும் தேவையான திறன்களைப் பெறச் செய்யவேண்டும். சமூகத் தேவைகள் அனைத்திற்கும் மொழியைத் திறம்படக் கையாளும் ஆற்றலை வளர்த்தெடுக்க வேண்டும். செய்யுள் மற்றும் உரைநடையில் அமைந்த படைப்புகளை நன்கு புரிந்துகொள்ளவும், புரிந்துகொண்டதைப் பேச்சிலும் எழுத்திலும் வெளிப்படுத்தவும் ஆற்றல் பெற வேண்டும். தமிழ் மொழிப் பாடங்களைக் கற்கும்போது, அவற்றின் ஊடாக, மொழியின் தொன்மை,சிறப்பு, தமிழ்ச் சமூகத்தின் வரலாறு, பண்பாடு, சிந்தனை மரபு, விழுமியங்கள் போன்றவற்றையும் அறிதல் வேண்டும். இவற்றைக் கருத்தில் கொண்டு, உயர்கல்விக்குரிய (ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு) தமிழ்மொழிப் பாடத்திட்டம் கீழ்க்காணுமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

### தமிழ்மொழிப் பாடம் கற்பிப்பதன் முக்கிய நோக்கங்கள்

- ✓மொழியை இலகுவாகக் கையாளவும் திறமையுடன் மொழிவழியே கருத்துகளை வெளிப்படுத்தவும் வழிகாட்டுதல்
- ✓மொழியைக் கற்கவும், மொழிவழி பிற பாடங்களைக் கற்கவும் அடித்தளம் அமைத்தளித்தல்
- ✓பல்வேறு இலக்கியங்கள், இலக்கிய இலக்கண ஆசிரியர்களின்வழி மொழியின் கட்டமைப்பைப் புரிந்துகொள்ளச் செய்தல்
- ✓தன்னம்பிக்கையுடன் தயக்கமின்றித் தமிழ்மொழியைப் பயன்படுத்தப் பழக்குவித்தல்
- ✓தமிழ்மொழி என்பது தகவலுக்கான ஊடகம் மட்டுமன்று, பண்பாடு, வாழ்வியல், நாகரிகக் கூறுகளுடன் பின்னிப் பிணைந்த உயிர்ப்புடைய வாழ்வியல்மொழி என்பதை உணரச் செய்தல்

- ✓ இன்றைய தகவல் தொழில்நுட்பம், ஊடகங்கள், அறிவியல் ஆகியவற்றின் வளர்ச்சிகளில் தமிழ்மொழி தன்னைப் புதுப்பித்துக்கொள்வதற்குக் கலைச்சொற்களை உருவாக்கவும் உருவாக்கப்பட்ட சொற்களஞ்சியத்தைப் பொருத்தமுறப் பயன்படுத்தவும் ஊக்குவித்தல்
- ✓ தமிழ்மொழியைப் பயன்படுத்தும் போதெல்லாம் அதன் தொன்மையை உள்ளுணர்ந்து பெருமித உணர்வுடன் வெளிப்படுத்தப் பள்ளிகளிலும் வகுப்பறைகளிலும் வாய்ப்புகளை ஏற்படுத்தி அளித்தல்

**உயர்நிலைக் கல்வியின்வழி வளர்க்கப்படும் மொழித்திறன்கள்**

கற்றல், இலக்கு நோக்கியது. நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் திறன்கள் எனப்படுகின்றன. பள்ளிக் கற்றலின் தொடக்க நிலை (1–5 வகுப்புகள்), உயர் தொடக்க நிலை (6–8 வகுப்புகள்), உயர்நிலை (9–10 வகுப்புகள்), மேனிலை (11–12 வகுப்புகள்) ஆகிய நிலைகளில் மாணவர்கள் எவ்வெத் திறன்களைப் பெற வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. அவ்வகையில் உயர்நிலையில்,

- அடிப்படைத் திறன்கள் (கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல்)
- உயர்நிலைச் சிந்தனைத் திறன்கள்
- 21ஆம் நூற்றாண்டுத் திறன்கள்/தொழில்நுட்பத் திறன்கள்
- மென்திறன்கள்
- சொல்லாட்சித்திறன்
- அகராதியைப் பயன்படுத்தும் திறன்

போன்றவை கைவரப் பெற வேண்டும்.

திறன்களின் உட்கூறுகளான,

- ➢ உரைப்பகுதியை உரிய ஒலிப்புடன் படித்தல், மையக் கருத்தறிதல், வினா உருவாக்குதல், வினாவிற்கேற்ற விடையளித்தல், குறிப்பெடுத்தல், விவரித்தல்
- ➢ மொழி ஆளுமைத் திறன் விவாதம், உரையாடல்களில் பங்கேற்று, ஏற்ற இறக்கங்களுடன் பேசுதல், எழுதுதல்
- ➢ பகுதியைப் படித்துக் கருத்துகளைப் பகுத்தும், தொகுத்தும், வகைப்படுத்தியும், வெளிப்படுத்த அறிதல்.
- ➢ புதிய சொற்கள், பிறமொழிச் சொற்கள், இணைச் சொற்கள் அறிதல்
- ➢ கட்டுரை, கடிதம், விண்ணப்பங்களை உரிய வடிவத்துடனும், நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்தியும் எழுதுதல்,

- ஆழ்ந்த படிப்பின்வழி பாடப்பகுதிகளையும் அகன்ற படிப்பின்வழி துணைப்பாடம் முதலிய பிற பகுதிகளைத் தானே கற்க அறிதல்
- இலக்கியங்களின் வழியாக மொழி வழங்கும் பகுதிகளின் மற்றும் சார்ந்த மக்களின் வரலாறு, பண்பாடு அறிதல்
- மொழிவழியாகப் பல்துறை அறிவு (சித்த மருத்துவம், விளையாட்டு, இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள்) பெறுதல்.
- புதிய சொற்களின் பொருளறிதல், அகரமுதலியைப் பயன்படுத்த அறிதல், சொற்களஞ்சியம் பெருக்குதல்
- உரையாடல், நாடகம் அமைத்து எழுதுதல். நிகழ்ச்சி அறிவிப்புகளை நிரல்படவும், சுவைபடவும் கூறுதல், எழுதுதல்
- மொழி நயம் அறிதல் (உவமைகள், பழமொழிகள், மரபுத் தொடர்கள், ஒருசொல் பலபொருள், பலபொருள் ஒரு சொல்)
- நயம் பாராட்டுதல், படைப்பாற்றல், சிந்தனைத் திறன் அறிதல்
- மறுப்புத் திறன் அறிதல், மனித உறவுப் பாலத்தைத் தக்க வைக்க ஏற்றவாறு மொழியைப் பொருத்தமுறக் கையாளும் திறன் பெறுதல், உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதல், தன்னைப் போலப் பிறரை எண்ணுதல் போன்ற வாழ்வியல் மென்திறன் கூறுகளை (Soft Skills) மொழிவழி பெறுதல் போன்ற தமிழ்மொழிவழி பெறும் திறன்கூறுகள் மாணவர்களைச் சென்றடையக் கீழ்க்காணுமாறு பாடத்திட்டத்தில் பாடக்கூறுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

**தமிழ்மொழி – பாடக்கூறுகள்**

**1.செய்யுள் / கவிதை**

**2.உரைநடை**

**3.இலக்கணம் / மொழித்திறன்**

**4.துணைப்பாடம்**

பாடல் வகைகள் அனைத்தும் செய்யுள் / கவிதைப்பகுதியில் பாடமாக வைக்கப்படும்.

கட்டுரை, கடிதம், நாடகம், உரையாடல், நேர்காணல் போன்ற வடிவங்கள் உரைநடை அமைப்பினுள் பாடமாக்கப்படும்.

துணைப்பாடம் என்னும் பாடக்கூறினுள் கதை, சிறுகதை, பயணம், தன்வரலாறு, வருணனை, விவரிப்பு போன்றவை பாடமாக்கப்படும்.

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி போன்ற இலக்கணப் பகுதிகள் வகுப்பு நிலை மற்றும் மாணவனின் புரிதலுக்கு ஏற்ப இலக்கணம் என்னும் பாடக்கூறினுள் பாடமாக்கப்படும்.

இப்பாடக்கூறுகளைக் கற்பிப்பதால் ஏற்படும் கற்றல் விளைவுகள் பின்வருமாறு :

**செய்யுள் கற்பித்தலின்நோக்கங்களும் திறன்களும்**

✓செய்யுளையும் உரைநடையையும் வேறுபடுத்திக் கூறல்
✓கவிதை இன்பத்தை உருவாக்கல்
✓ஓசை நயம் கூறல் (எதுகை,மோனை ........)
✓பொருட் சுவையறிதல்
✓சொற்சுவையறிதல்
✓உவமை நயம் கூறல்
✓சிலேடை நயம் கூறல்
✓கற்பனைத்  திறன் கூறல்
✓அழகியலை உணரச்செய்தல்
✓பண்பாட்டினை வளர்த்தல்
✓பாடலின் கருத்துணர்தல்
✓படைப்பாற்றலை வளர்த்தல்
✓செய்யுள் கற்பதை விரும்பச் செய்தல்
✓நாட்டுப்பற்று, மொழிப்பற்று வளர்த்தல்

**உரைநடை கற்பித்தலின் நோக்கங்களும் திறன்களும்**

✓சொல் மரபை அறியச் செய்தல்
✓தொடர் மரபை அறியச் செய்தல்
✓பத்தி மரபை அறியச் செய்தல்
✓மொழித் தூய்மை கூறல்
✓சொற்களஞ்சியம் பெருக்குதல்
✓சொல்லாட்சித் தேவையைக் கூறல்
✓சொற்றொடரை மரபுத்தொடருடன் இணைத்தல்

- ✓கருத்து வளம் உருவாக்கல்
- ✓வாய்விட்டுப் படிக்கப் பயிற்சியளித்தல்
- ✓தொடர்களைப் பிழையின்றிக் கூறவும் எழுதவும் செய்தல்
- ✓நடைமுறை உரைநடை அமைப்பை வளர்த்தல்

**இலக்கணம் கற்பித்தலின் நோக்கங்களும் திறன்களும்**

- ✓மொழிக்கு இலக்கணத்தின் இன்றியமையாமை கூறல்
- ✓முறையான இலக்கணம் கற்பித்தல்
- ✓ஆசிரியருக்கும் இலக்கண அறிவை வளர்த்தல்
- ✓திருத்தமாக எழுதவும் பேசவும் கற்பித்தல்
- ✓மொழியின் சிறப்பியல்புகளைப் போற்றுதல்
- ➢இலக்கண ஈடுபாட்டை உருவாக்குதல்
- ➢பா புனையும் திறன் வளர்த்தல்
- ➢மொழியாக்கத்திறன் வளர்த்தல்

**துணைப்பாடம் கற்பித்தலின்நோக்கங்களும் திறன்களும்**

- ✓படித்துப் பொருள் உணர்தல்
- ✓அகன்ற படிப்பைப் பழகுதல்
- ✓ஆழ்ந்த படிப்பிற்கு உள்ள வேறுபாட்டினை உணர்தல்
- ✓சொற்களஞ்சியம் பெருக்குதல்
- ✓பத்தியைப் படித்துப் பொருளுணரும் திறன் பெறல்
- ✓தகவல் அறிவு பெறுதல்
- ✓படித்தலில் ஆர்வம் ஏற்படுதல்
- ✓அகராதி பயன்படுத்துதல்
- ✓உயர்நிலைத் திறன்கள் பெறுதல்

**மொழிவழி வளர்க்கப்படும் பயன்பாட்டுத் திறன்கள்**

தமிழ்மொழிப் பாடக்கூறுகளான செய்யுள், உரைநடை, துணைப்பாடம் மற்றும் இலக்கணம் வழியாக மட்டுமின்றி இன்னபிற மொழிவழிப் பயன்பாட்டுத் திறன்களும் தொடர்ந்து மாணவர்களுக்கு அளிக்கப்பட்டு வர வேண்டும்.

எழுத்துகளை, சொற்களை, தொடர்களை வரிசைப்படுத்தி வகைப்படுத்தும் திறன் அகராதியில் சொல் தேடலுக்கும் பொருள் அறிதலுக்கும் அகராதி உருவாக்கலுக்கும் சொற்களை இலக்கிய, இலக்கண அடிப்படையில் பிரித்து அகராதி உருவாக்கலுக்கும் அடிப்படையாக அமைவதால் அகரவரிசைப்படுத்தும் திறன் மாணவர் வகுப்பு நிலைக்கேற்ப வளர்நிலையில் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்மொழியின் தொடர் அமைப்பை ஆழ அறிதலுக்கும் பிற மொழியோடு ஒப்பிட்டுப் புரிந்து கொள்வதற்கும் மொழியைப் பகுத்து உணர்தலுக்கும் மொழிபெயர்ப்புத் திறன் இன்றியமையாதது. சொல் மொழிபெயர்ப்பிலிருந்து தொடங்கி தொடர், சிறுபத்தி எனப் படிப்படியாக மாணவர்கள் மொழிபெயர்க்கும் திறனைப் பெறும் வகையில் உயர்நிலையில் மொழித்திறன்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இன்றைய தகவல் உலகில் இதழியல் துறையில் தமிழறிந்த மாணவர்கள் வேலை வாய்ப்புகளைப் பெறும் வகையில் பிழைத்திருத்தம் மற்றும் தொகுத்தல் பணிகளை மேற்கொள்ளவும் மெய்ப்புத் திருத்துதலுக்கான அடித்தளத்தினை அமைக்கவும் பிழை களைதல் திறனைப் பெறும் வகையில் மொழிப்பயிற்சித்திறன்கள் வரையறுக்கப்பட்டுள்ளன.

**மொழிப்பாடத்தின் வழி பெறப்படும் விழுமியங்கள்**

மொழிப்பாடம் திறன்பாடம் மட்டுமன்று. தமிழ்மொழிவழி தமிழர் வாழ்வியலும் அது சார்ந்த பண்பாட்டுக் கூறுகளும் மாணவனைச் சென்றடைகின்றன. தமிழ்மொழி அற நெறியையும் அன்பின் விளைவையும் நட்பையும் நேர்மையையும் கொடையையும் நடுவுநிலைமையையும் பன்னெடுங்காலமாக இலக்கியங்கள் வாயிலாக உணர்த்தி வருகிறது. மொழிப்பாடத்தில் இலக்கியங்களை மாணவர்களுக்குக் கற்பிக்கும்போது சார்ந்த விழுமியங்களை உணரச் செய்வது, இன்றைய வளரிளம் பருவத் தலைமுறையினருக்கு (உயர்நிலையில் கல்வி பெறும் மாணவருக்கு) இன்றியமையாத் தேவையாகும்.

இலக்கியங்கள்வழி வாழ்வியல் திறன்கள் என்னும் மென்திறன்களும் நோக்குதலுக்கு உள்ளாகின்றன. தமிழ்மொழிப் பாடம் கற்பதனால் மாணவன், மொழியைத் திறம்படக் கையாளவும் தன்னம்பிக்கையுடன் வாழ்வை எதிர்கொள்ளவும் பயன்படுத்தும் மொழியின் பெருமையை, வரலாற்றுத் தொன்மையை உணர்ந்து பெருமிதத்துடன் பயன்படுத்தவுமான திறன்களைப் பெறவேண்டும் என்னும் உயரிய நோக்கங்களைக் கொண்டு கீழ்க்காண் பொருண்மை அடிப்படையில் உயர்நிலைத் தமிழ்மொழிப் பாடத்திட்டம் வடிவமைக்கப்படுகிறது.

**பொருண்மைகள்**

1.மொழி
2.நாடு/சமூகம்
3.அரசு/நிர்வாகம்
4.இயற்கை/வேளாண்மை/சுற்றுச்சூழல்
5.தொழில்/வணிகம்
6.கலை/கல்வி
7.நாகரிகம்/பண்பாடு
8.அறிவியல்/தொழில்நுட்பம்
9.அறம்/தத்துவம்/சிந்தனை
10.மனிதம்/ஆளுமை
11.புதுமைகள்/அமைப்பியல்/அழகியல்

இப்பொருண்மைகள் அடிப்படையில் பாடப்பகுதிகள் உயர்நிலையில் ஒன்பது, பத்து வகுப்புகளுக்கு ஏற்ப மாணவர்களின் அறிதல், புரிதல், பயன்படுத்தல், ஆளல் ஆகிய மதிப்பீட்டுக்கூறுகளை அடியொட்டி கற்றல் வெளிப்பாடுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

## கற்றல் விளைவுகள் – ஒன்பதாம் வகுப்புத் தமிழ்ப்பாடத்திட்டம்

| பொருண்மை | இயலமைப்பு | பாடப்பொருள்/ பாடவடிவம் | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|---|
| மொழி | செய்யுள் | தமிழ் மொழியின் தொன்மைச் சிறப்பை உணர்த்தும் புதுக்கவிதைகள் | •தமிழ் மொழியின் தனித்தன்மை, இனிமையைப் புதுக்கவிதைவழி சுவைத்து உணர்வர்<br>•செய்யுளின் அருஞ்சொற்களுக்குத் தானே அகராதி பார்த்துப் பொருளறிந்து கருத்தினை உணர்வர்<br>•புதுக்கவிதைகளைப் படைக்கும் திறனை வளர்த்துக் கொள்வர் |
| | உரைநடை | திராவிட மொழிக் குடும்பம், மொழியின் அமைப்பு சார்ந்த கட்டுரைப் பகுதிகள் | •தமிழ் மொழியின் தனிச்சிறப்புகளைப் பிற திராவிட மொழிகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பர் |
| | துணைப்பாடம் | சொற்பொருள் மாற்றம் குறித்த உரையாடல் / நேர்காணல் | •சொற்பொருள் மாற்றத்தை அறிந்து எழுத்தில் பயன்படுத்தும் திறன் பெறுவர்<br>•நேர்காணல் செய்வதற்கான வினாத் தொடுக்கும் திறனைப் பெறுவர் |
| | இலக்கணம் | எழுத்திலக்கணத்தின் பாகுபாடுகள் (எண், பெயர், முறை, பிறப்பு, வடிவம், மாத்திரை, மொழி முதல், மொழியிடை, மெய்ம்மயக்கம், மொழியீறு) | •எழுத்திலக்கணத்தின் பாகுபாட்டினை அறிந்து மொழியைப் பயன்படுத்துவர் |

| பொருண்மை | இயலமைப்பு | பாடப்பொருள்/ பாடவடிவம் | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|---|
| நாடு/ சமூகம் | செய்யுள் | சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் ஆட்சித் திறனை விவரிக்கும்சங்க இலக்கியப் பாடல்கள் | •இலக்கியப் பாடல்களை உரிய ஓசை நயம் மாறாது படித்துச் சுவைக்கும் ஆற்றல் பெறுவர்<br>•பேரரசுகளின் நாடுகளை வருணனை மூலம் காட்சிப்படுத்தும் இலக்கியப் பாடல்களைச் சுவைத்து மகிழ்வர் |
| | உரைநடை | பண்டைத் தமிழகத்தை ஆட்சி புரிந்த பேரரசுகள் குறித்த உரைப்பகுதிகள் | •பண்டைய மன்னர்களின் போர்த்திறம், நீதி வழுவா முறை, அயல்நாடுகளுடன் கொண்டிருந்த வணிகத்தொடர்பு போன்றவற்றை இலக்கியச் சான்றுகளின்வழி தெரிந்து கொள்வதுடன் இன்றைய சமூக வாழ்க்கையுடன் ஒப்பிட்டு உணர்வர்<br>•பழந்தமிழகப் பேரரசுகள் குறித்தும் அவர்களது ஆட்சித்திறம் குறித்தும் அக்காலத்தில் வழங்கப்பட்ட மொழி வளத்தி னை இலக்கியங்கள் வழி புரிந்து உணர்வர் |
| | துணைப்பாடம் | சங்க இலக்கிய அரசர்கள் குறித்த வருணனைக் கட்டுரை | •பண்டைய மன்னர் குறித்து எழுதப் பெற்றுள்ள நூல்களைத் தேடிப் பயிலும் ஆர்வத்தைப் பெறுவர்<br>•துணைப்பாடப் பகுதியில் உள்ள தொடர் அமைப்பு முறைகளைப் புரிந்து கொள்வதன் வாயிலாகப் பல்வேறு மொழிநடை அமைப்புகளை அறியவும் பயன்படுத்தவும் முயற்சி செய்வர் |
| | இலக்கணம் | சொல்லின் பகுதிகள் – திணை, பால், எண், இடம், காலம் | •சொல்லின் பகுதிகளை இலக்கணப் பாடம்வழி அறிந்து முறையாக பிழையின்றி எழுத முற்படுவர் |

| பொருண்மை | இயலமைப்பு | பாடப்பொருள்/ பாடவடிவம் | கற்றல் வெளிப்பாடுகள் |
| --- | --- | --- | --- |
| அரசு/நிருவாகம் | செய்யுள் | பண்டைய ஆட்சிமுறையை விளக்கும் இலக்கியப் பாடல்கள்<br>இன்றைய ஆட்சிமுறையை விளக்கும் புதுக்கவிதைகள்<br>திருக்குறள் – அரசியல் | •செய்யுளில் இடம் பெற்றுள்ள சொற்களின் சிறப்பு, பொருளினை அறிந்து பயன்படுத்தும் ஆற்றல் பெறுவர் |
| | உரைநடை | பழங்கால நிருவாக முறை குறித்த கட்டுரைப் பகுதிகள் | •பழங்கால நிருவாக முறையின் மேன்மையை அறிவதன் வாயிலாகத் தமிழர்கள் குறித்த பெருமித உணர்வை அடைவர்<br>•பழங்கால நிருவாகமுறைக்கும் இன்றைய ஆட்சி முறைக்கும் உள்ள வேறுபாட்டினை ஒப்பிட்டு உணருவர் |
| | துணைப்பாடம் | தஞ்சைப் பெரிய கோவில் – நிருவாகம் குறித்த கல்வெட்டு செய்திகள் | •பழங்காலக் கோயில் நிருவாகம், குள நிருவாகம், விளைநிலங்களை நிருவகித்த முறை போன்றவை குறித்த தெளிவான அறிவு பெறுவர்<br>•கல்வெட்டு ஆராய்ச்சி குறித்த ஆக்க மனப்பான்மையைப் பெறுவர்<br>•தமிழெண்களைப் பயன்படுத்தும் திறன் பெறுவர் |
| | இலக்கணம் | சொல் வகைகள் –<br>இலக்கணச் சொல்வகை<br>இலக்கியச் சொல்வகை | •சொல்லின் வகைகளை அறிந்து வகைப்படுத்தும்/ பயன்படுத்தும் ஆற்றலை வளர்ந்துக் கொள்வர் |

| பொருண்மை | இயலமைப்பு | பாடப்பொருள்/ பாடவடிவம் | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|---|
| இயற்கை /வேளாண்மை /சுற்றுச்சூழல் | செய்யுள் | சுற்றுச்சூழலை மையப்படுத்திய சங்க இலக்கியப் பாடல்கள் / புதுக்கவிதை | •மக்களின் வாழ்வாதாரம் இயற்கையை இயற்கையை நம்பியுள்ளதை உணர்ந்து இயற்கைச் சூழலைப் பாதுகாக்கும் தூய்மையைப் பேணுவர் |
| | உரைநடை | அலையாத்திக் காடுகள் பற்றிய அறிவியல் கட்டுரைகள் ,நீரின்றி அமையாது உலகு , தமிழ் உணவுக்கும் அமிழ்தென்று பெயர் | •அலையாத்திக் காடுகள் குறித்த அறிவியல் செய்திகள் ,நீரின்றி அமையாது உலகு , தமிழர்களின் உணவு அமிழ்தம் ஆகிய உண்மைகளை உணர்ந்து போற்றுவர்<br>•தமிழரின் உணவு முறைகள் குறித்த செய்தித் தொகுப்பினை உருவாக்குவர் |
| | துணைப்பாடம் | நிலா, மழை,ஞாயிறு குறித்த கால வாரியான பாடல்கள் | •இயற்கையின் அற்புதங்களை உணர்த்தும் கவிதைகளைப் படிக்கும் ,படைக்கும் ஆர்வம் பெறுவர் |
| | இலக்கணம் | மொழி வகைகள்<br>தனி மொழி ,தொடர் மொழி ,பொது மொழி<br>ஒரு பொருட் பன் மொழி ,இரு பெயரொட்டுப் பண்புத் தொகை | •ஒரு கருத்தினைக் கோவையாக எழுதும் திறனை வெளிப்படுத்துவர்<br>•மரபுத் தொடர்களில் பயன்படுத்தும் திறன் பெறுவர்<br>•மொழியின் வகைகளை நடைமுறையில் (பேச்சிலும்,எழுத்திலும் ) கண்டறிந்து புரிதலை மேம்படுத்திக் கொள்வர் |

| பொருண்மை | இயலமைப்பு | பாடப்பொருள்/ பாடவடிவம் | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|---|
| தொழில் / வணிகம் | செய்யுள் | வேளாண்மைத் தொழிலை மையப்படுத்திய நாட்டுப்புறப் பாடல்கள் | •வேளாண்மைத் தொழிலின் சிறப்பினை இலக்கியங்கள் வாயிலாக தெரிந்து கொண்டு இன்றைய நிலையில் அதனை மேம்படுத்த செய்ய வேண்டிய முயற்சிகள் குறித்து சிந்திக்கும் திறனை வளர்த்துக் கொள்வர்<br>•தமிழகத்தில் நடைபெறும் முக்கிய வேளாண் தொழில்கள் பற்றியும் அவை நடைபெறும் இடங்கள் குறித்த அறிவினைப் பெறுவர்<br>•வேளாண்மை குறித்த திருக்குறலின் கருத்துக்களை புரிந்து கொண்டு எடுத்துக் கூறுவர் |
| | உரைநடை | தமிழர் தொழில் குறித்து விவரிக்கும் கட்டுரைப் பகுதிகள் | •தங்கள் பகுதியில் நடைபெறும் வேளாண் தொழிலை விளக்கி வகுப்பறையில் பேசிக் கலந்துரையாடும் பாங்கை பெறுவர்<br>•வேளாண்மைக் குறித்து வழங்கப்படும் பழமொழிகளைத் தொகுத்து ஆற்றல் பெறுவர் |
| | துணைப்பாடம் | பழந்தமிழ் வணிகம் – கட்டுரை | •பழந்தமிழ் வணிகம் குறித்த அறிவைப் பெறுவர் |
| | இலக்கணம் | தொடர் இலக்கணம்<br>புணர் நிலை , எழுத்து நிலை,சொல் நிலை ,பொருண்மை நிலை , புணர்ச்சி வகைகள் | •எழுவாய் ,எழுத்து நிலை,புணர்ச்சி நிலை முதலானவற்றை புரிந்து கொண்டு தொடர் எழுதும் திறனை முறைப் படுத்துவர் |
| | | | |

| பொருண்மை | இயலமைப்பு | பாடப்பொருள்/ பாடவடிவம் | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|---|
| கலை / கல்வி | செய்யுள் | திருக்குறள்<br>புறநானூறு<br><br>ஏலாதி | தமிழகச் சிற்பக்கலையின் நுண் பண்புகளை அறிந்து வியப்புக்குள்ளாவர்<br>தமிழக கலைகளைக் குறித்த வரலாற்று அறிவைப் பெறுவர்<br>காலம் உணர்த்தும் ஓவியங்கள் மூலம் தங்கள் கற்றல் நினைவுடன் உணர்வர்<br>எதுகை மோனை நயங்களை பயன்படுத்தி இரு வரி கவிதைகளைப் எழுதுவர் |
| | உரைநடை | பெண் கல்வி<br>நாட்டுப்புற இசைக் கருவிகள்<br>இசை மூவர் | பெண் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்வர்<br>நாட்டுப்புற இசைக்கருவிகள் குறித்த அறிவைப் பெறுவர்<br>கலை,கல்வித்துறையில் புகழ் பெற்றவர்கள் குறித்து கட்டுரை எழுதும் திறன் பெறுவர் |
| | துணைப்பாடம் | பழந்தமிழ் வணிகம் – கட்டுரை வீதி நாடகம் | உரைப் பகுதியை நாடகமாக மாற்றி எழுதும் திறன் கிடைக்கப் பெறுவர் |
| | இலக்கணம் | வல்லினம் மிகு வல்லினம் மிகா இடங்கள் | உரைநடைப் பகுதியில் அமைந்து வரும் சந்திப் பிழைகளை நீக்கத் தெரிந்து கொள்வர் |

| பொருண்மை | இயலமைப்பு | பாடப்பொருள்/ பாடவடிவம் | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|---|
| கலை / கல்வி | செய்யுள் | திருக்குறள்<br>நற்றிணை<br>கார் நாற்பது<br>கலித்தொகை | இலக்கியம் வாயிலாக தமிழர்களின் உணவு குறித்த செய்திகளை அறிந்து வியப்பர்<br>தமிழ்ப் பழமொழிகளின் ஆழத்தை உணர்ந்து கொள்வர்<br>இலக்கியங்களில் பயின்று வரும் பழமொழிகளை நினைவு கூர்ந்து பேச்சிலும் ,எழுத்திலும் கையாளும் திறன் பெறுவர் |
| | உரைநடை | தமிழர் திருவிழாக்கள்<br>ஏறு தழுவுதல் / அகழாய்வுகள்<br>தமிழ் உணவுக்கு அமிழ்தென்று பெயர் – கட்டுரை | பழந்தமிழரின் உணவு முறை இக்கால உணவு முறைப் பற்றிய வேறுபடுத்தும் அறிவை பெறுவர்<br>பழந்தமிழரின் உணவு முறைகள் பற்றிய அறிவைப் பெறுவதுடன் பின்பற்றும் ஆற்றலைப் பெறுவர்<br>தமிழரின் பழமைகளை ஆராயும் அறிவை பெறுவர் |
| | துணைப்பாடம் | பழந்தமிழ் வழிபாட்டு மரபுகள் | பழங்கால வழிபாட்டு மரபுகளை அறிந்து பின்பற்றும் அறிவைப் பெறுவர் |
| | இலக்கணம் | பொருளிலக்கணம்<br>தொல்காப்பியர் கூறும் புறத்திணைகள் | தொல்காப்பியர் கூறும் புறத்திணைக் கோட்பாட்டை அறிவர் |

| பொருண்மை | இயலமைப்பு | பாடப்பொருள்/ பாடவடிவம் | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|---|
| கலை / கல்வி | செய்யுள் | திருக்குறள்<br>தொல்காப்பியம் | தமிழரின் இயற்கை மருத்துவத்தின் பெருமையுணர்ந்து பின்பற்றுவர்<br>இயற்கை மருத்துவத்தில் பயன் படும் மூலிகை வகைகளை அறிவர்<br>இயற்கை மருத்துவம் சார்ந்த பெயர்களை தொகுக்கும் அறிவைப் பெறுவர் |
| | உரைநடை | திருக்குறளில் அறிவியல் | திருக்குறள் கூறும் அறிவியல் செய்திகளை அறிவர்<br>அறிவியல் சொற்கள் ஒப்பிடும் அறிவுபெறுவர்<br>தானே அறியும் சிந்தனை திறன் பெறுவர் |
| | துணைப்பாடம் | வானியல் குறித்த கட்டுரை | வானியல் அறிவைத் தூண்டி விண்ணுக்கு செல்வது எளிது என்ற அறிவை பெறுவர் |
| | இலக்கணம் | பொருள் இலக்கணம்<br>நம்பியகப் பொருள் அடிப்படை<br>அகம் / புறம் | தமிழின் அகத்திணை ,புறத்திணை பகுப்பின் முறைமையை தெரிந்து கொள்வர்<br>பொருள் இலக்கணத்தின் வகைமையை அறிந்து கொள்வர் |

| பொருண்மை | இயலமைப்பு | பாடப்பொருள்/ பாடவடிவம் | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|---|
| அறம் /தத்துவம்,/சிந்தனை | செய்யுள் | திருக்குறள்<br>வள்ளலார் பாடல்<br>கவிதைகள் | வள்ளலாரின் தத்துவ நெறி முறைகளை அறிந்து கொள்வர்<br>பதினெண் சித்தர்களில் சிவவாக்கியர் பற்றி அறிந்து கொள்ளல்<br>திருக்குறளில் சான்றாண்மை அறம் குறித்த செய்திகளைப் பெறுவர் |
| | உரைநடை | ஐஞ் சிறு காப்பியங்கள் காட்டும் தத்துவ மரபு | ஐஞ் சிறு காப்பியங்கள் காட்டும் எளிய தத்துவச் செய்திகள் பற்றித் தெரிந்து கொள்வர்<br>தத்தமது மதம் சார்ந்த அறக்கருத்துக்களை அறிந்து வாழ்வில் பின்பற்றுவர்<br>சமணர்கள் செய்த தமிழ் தொண்டினை அறிந்து கொள்வர்<br>இலக்கியங்கள் காட்டும் தமிழார் சிந்தனை மரபுகளை அறிந்து கொள்வர் |
| | துணைப்பாடம் | தத்துவ நாடகம் | இராமனுஜரின் எளிய தத்துவக் கருத்துக்களை அறிந்து கொள்வர் |
| | இலக்கணம் | யாப்பிலக்கணம் – யாப்புறுபுகள் | செய்யுளுறுப்புகளை தெரிந்து கொண்டு அலகிட்டு வாய்ப்பாடு எழுதும் திறன் பெறுவர்<br>யாப்பிலக்கணத்தில் எழுத்து ,அசை ,சீர் ,தளை,அடி , தொடை வகைகளை அறிவர் |

| பொருண்மை | இயலமைப்பு | பாடப்பொருள்/ பாடவடிவம் | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|---|
| மனிதம் / ஆளுமை | செய்யுள் | காகிதப் பூக்கள் கவிதை<br>மணிமேகலை | மனித நேயம் குறித்த பண்பு நலன்களை தமிழ் இலக்கியங்கள் வாயிலாக பெற்று தம் வாழ்வில் பின்பற்றுவர்<br>மணிமேகலை காப்பியம் உணர்த்தும் அறக்கருத்துக்களை அறிந்து பெற்று தம் வாழ்வில் பின்பற்றுவர் |
| | உரைநடை | பெரு வெள்ளம் – 2015 | பெரு வெள்ளம் – 2015 – ல் ஏற்பட்ட போது உதவிய மனிதர்களின் மனித நேயச் செயல்களை அறிவர்<br>பேரிடர் காலங்களில் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்ற அறிவை பெறுவர் |
| | துணைப்பாடம் | சிறுகதை | ஆளுமைகள் வகுப்பில் பெரும் பிற மனிதப் பண்புகள் குறித்து சொல்லாடல் திறன் பெறுவர்<br>சிறுகதைகளைப் படித்து மையக்கருத்தை அறியும் பண்பினைப் பெறுவர் |
| | இலக்கணம் | அணி இலக்கணம்<br>7 அணிகள் துவக்கம் | அணி இலக்கணத்தை அறிந்து பாடலில் அமைந்த மறைபொருள் அறிவைப் பெறுவர்<br>சொல்லுக்குப் பொருள் பொருளுக்குச் சொல் என்ற அணியழகைப் பாராட்டும் திறன் பெறுவர் |

| பொருண்மை | இயலமைப்பு | பாடப்பொருள்/ பாடவடிவம் | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|---|
| புதுமை / அமைப்பியல் / அழகியல் | செய்யுள் | ஆற்றுப்படை நூல்கள்<br>இசைக்கருவிகள்<br>பொருநராற்றுப்படை<br>பெரும்பாணாற்றுப்படை<br>யாழ் வருணை | தமிழ் இலக்கியத்தில் ஏற்பட்டுள்ள புதுமைகள் பற்றி அறிந்து கொள்வர்<br>ஆற்றுப்படை நூல்கள் கூறும் அழகியல் கருத்துக்களை அறிவர்<br>இசைக்கருவிகளை மீட்டும் திறனைப் பெறுவர் |
| | உரைநடை | மொழி அமைப்பியல் கட்டுரை | தமிழ் மொழியின் அமைப்பைப் பற்றி தெரிந்து பயன்படுத்துவர்<br>மொழி நடை ,மொழி இனிமை அறிவை பெறுவர்<br>இலக்கண அமைப்பை அறிவர் |
| | துணைப்பாடம் | சிறுகதை | சிறுகதைகள் மூலம் புதுமை கருத்துக்களைப் பெறுவர்<br>சிறுகதைகளைப் படித்து மையக்கருத்தை அறியும் பண்பினைப் பெறுவர் |
| | இலக்கணம் | இலக்கண நூலும் நூலாசிரியரும் | இலக்கண நூல் நூலாசிரியர்களின் பெயர்களை அறிவர் |

## கற்றல் விளைவுகள் – பத்தாம் வகுப்புத் தமிழ்ப்பாடத்திட்டம்

| பொருண்மை | இயலமைப்பு | பாடப்பொருள்/ பாடவடிவம் | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|---|
| மொழி | செய்யுள் | தமிழ் மொழியின் தொன்மைச் சிறப்பை உணர்த்தும் மரபுக் கவிதைகள் | •தமிழ்மொழியின் தொன்மைச் சிறப்பினை உணர்ந்து அறிகின்றனர்<br>•மயங்கொலிச் சொற்களின் பொருள் வேறுபாடறிந்து பயன்படுத்த அறிகின்றனர்<br>•அகர வரிசைப்படுத்தும் திறனை படைப்புத் திறன் வாயிலாக வெளிப்படுத்த முயற்சிக்கின்றனர் |
| | உரைநடை | உரைநடை வரலாறு/ கிளைமொழி வரலாறு குறித்த கட்டுரைப் பகுதிகள் | •தமிழ் மூலமொழி என்பதையும் அதிலிருந்து பிறந்த பிற கிளைமொழிகள் எவை என்பதையும் தெரிந்து கொள்கின்றனர் |
| | துணைப்பாடம் | உரைநடை நயம் உணர்த்தும் இலக்கியப் பகுதிகள் – பரிதிமாற் கலைஞர், மறைமலையடிகள் | •உரைப் பகுதியிலுள்ள நயங்களை உள்வாங்கிக் கொண்டு நயம் வெளிப்பட எழுதும்திறன் பெறுகின்றனர்<br>•தமிழ்மொழியின் சிறப்பு குறித்து உரையாற்றும் ஆற்றல் உடையவராகின்றனர் |
| | இலக்கணம் | சார்பெழுத்துகளின் தொகையும் விரியும் , சார்பெழுத்துகளின் பயன்பாடுகளைத் தொடர்களின் வழி அறிதல் (உயிரளபெடை, ஒற்றளபெடை) | •சார்பெழுத்துகளின் வகை தொகையினையும் தொடர்களில் அதன் பயன்பாட்டினையும் அறிந்து கொள்கின்றனர் |

| பொருண்மை | இயலமைப்பு | பாடப்பொருள்/ பாடவடிவம் | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|---|
| நாடு / சமூகம் | செய்யுள் | கங்கர், நுளம்பர், வேளிர், முத்தரையர், வடுகர், தொண்டைமான், சேதுபதி போன்ற சிற்றரசுகளின் குறிப்புகளை விளக்கும் சங்க இலக்கியப் பாடல்கள் – எட்டுத்தொகை, பத்துப்பாட்டு (புறநானூறு, அகநானூறு, கலித்தொகை) | •இலக்கியப் பாடலின் பொருளை உரைநடைப்படுத்திக் கூறும் திறன் உடையவராகின்றனர்<br>•பழந்தமிழகச் சிற்றரசுகளைக் குறித்தும் அவர்களின் ஆட்சித் திறத்தினையும் இன்றைய நிர்வாக முறைகளுடன் ஒப்பிட்டு உணர்ந்து கொள்கின்றனர்<br>•சிற்றரசுகள் ஆண்ட நிலப்பகுதி, சிற்றரசுகள் பேரரசுகளுடன் கொண்டிருந்த நட்புறவு முதலான செய்திகளைத் தெரிந்து கொண்டு தான் வாழும் பகுதி எத்தகைய சிறப்பினைப் பெற்றுள்ளதென்பதை அறிகின்றனர் |
| | உரைநடை | பண்டைத் தமிழகத்தை ஆட்சிபுரிந்த சிற்றரசுகள் குறித்த உரைப்பகுதிகள் – ஓவச் செய்தி – மு.வ | •கருத்தைச் சுவைபட வருணித்து எழுதும் திறனைப் பெறுகின்றனர்<br>•பாடப்பகுதியிலுள்ள கூட்டுச் சொற்களைப் பொருள் விளங்கப் படிக்கக் கற்றுக் கொள்கின்றனர் |
| | துணைப்பாடம் | நாடகம் | •இலக்கியக் கதை மாந்தர்களை முன்னிலைப்படுத்தி நடிக்கும் திறன் பெறுகின்றனர் |
| | இலக்கணம் | வழு, வழாநிலை, வழுவமைதி | •வழு, வழுவமைதி, வழாநிலையினை நடைமுறையில் கண்டறிகின்றனர் |

| பொருண்மை | இயலமைப்பு | பாடப்பொருள்/ பாடவடிவம் | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|---|
| அரசு/நிருவாகம் | செய்யுள் | சங்ககால ஆட்சிமுறையை விளக்கும் சங்க இலக்கியப் பாடல்கள் | •சங்கஇலக்கியப் பாடல்கள்வழி நிருவாகக் கோட்பாடுகளைப் புரிந்து கொள்கின்றனர்.<br>•இலக்கியச் சொற்களின் பொருட் சிறப்பினை உணர்ந்து பயன்படுத்தும் ஆற்றல் பெறுகின்றனர். |
| | உரைநடை | இலக்கியப் பாடல்கள் வெளிப்படுத்தும் ஆட்சி முறை/ நிருவாகக் கோட்பாடுகள் குறித்த கருத்துக்கோவை | •ஆட்சியாளரின் கடமை, பொறுப்புகளைத் தெரிந்து கொள்வதுடன் நல்ல குடிமகனுக்குரிய பண்புநலன்களைப் பின்பற்றும் திறன் உடையவராகின்றனர்<br>•வரி விதித்தல், ஆட்சிமுறை முதலிய நிருவாக முறை குறித்த செய்திகளை இலக்கியங்கள்வழி அறிகின்றனர், அதன் வாயிலாக இலக்கியங்கள், எழுதப்பட்ட காலத்தை எடுத்துக்காட்டும் கண்ணாடிகளாக விளக்கும் திறத்தைப் புரிந்து கொள்கின்றனர்<br>•இலக்கியங்கள் காலங்காட்டும் கண்ணாடிகளாக இருப்பதை உணர்ந்து கற்கின்றனர் |
| | துணைப்பாடம் | கட்டுரை | •குறிப்புகளைக் கொண்டு செய்தியை விவரித்து எழுதும் திறன் பெறுகின்றனர்<br>•இலக்கியங்கள் எழுதப்பட்ட காலத்தில் வழங்கப்பட்ட மொழி அமைப்பை அறிகின்றனர் |
| | இலக்கணம் | சொல் உறுப்புகள்<br>சொல் – ஓரெழுத்து ஒருமொழி, பதம், பகுபதம், பகாப்பதம், பகுபத உறுப்புகள் | •ஓரெழுத்து ஒருமொழி, சொல் உறுப்புகளைப் புரிந்து கொள்கின்றனர்.<br>•சொல்லின் முதல் எழுத்து, இறுதி எழுத்து, இடையெழுத்து இவற்றைப் பிரித்து வகைப்படுத்திப் படிப்பதன் வாயிலாகச் சொல் அமைப்பை உணர்ந்து பயன்படுத்துகின்றனர் |

| பொருண்மை | இயலமைப்பு | பாடப்பொருள்/ பாடவடிவம் | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|---|
| இயற்கை/வேளாண்மை/சுற்றுச் சூழல் | செய்யுள் | ஐவகை நில அமைப்பினை மையப்படுத்திய இலக்கியப் பாடல்கள்/ புதுக்கவிதைகள் திணைமாலை நூற்றைம்பது– குற்றாலக் குறவஞ்சி குறுந்தொகை | மக்களின் வாழ்வு இயற்கையுடன் இயைந்தது என்பதை ஐவகை நிலத்துடன் பொருத்தி உணர்வர்<br>பழந்தமிழர் இயற்கையை இறைவனாக போற்றி வணங்கிய செய்திகளை அறிவர்<br>இலக்கியப் பாடல்கள் உணர்த்தும் இயைபு உவமை உருவக நயங்களைப் புரிந்து கொண்டு பேச்சாற்றல் திறன் வளர்த்துக் கொள்வர்<br>பாடப்பகுதியில் இடம்பெறும் வருனைகளை விளக்கி எடுத்துரைக்கும் ஆற்றல் உடையவராகின்றனர் |
| | உரைநடை | இயற்கையோடு இயைந்த வாழ்வு – கட்டுரை | ஐவகை நிலா அமைப்பை இன்றைய சூழலுடன் ஒப்பிடும் திறன் பெறுவர்<br>உரை நடை வாயிலாக இடம்பெற்றுள்ள தொடர்களை வகைபடுத்தும் திறன் பெறுவர் |
| | துணைப்பாடம் | வசன கவிதை | கடலில் நிகழும் அரிய செய்திகளைத் தெரிந்து தன் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பினை பெறுவர் |
| | இலக்கணம் | தொடர் வகைகள் | தொகை நிலை ,தொகா நிலைத் தொடர்களுக்குள் உள்ள வேறுபாட்டை அறிந்து பயன்படுத்துவர் |

| பொருண்மை | இயலமைப்பு | பாடப்பொருள்/ பாடவடிவம் | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|---|
| தொழில் / வணிகம் | செய்யுள் | வேளாண்மை குறித்த இலக்கியப் பாடல்கள் முக்கூடற்பள்ளு | வேளாண் தொழிலைப் பண்டைய தமிழர்கள் பின்பற்றியதை இலக்கியம் வாயிலாக அறிவர்<br>நெல்வகை ,மீன் வகை பற்றி அறியச் செய்தல் |
| | உரைநடை | வேளாண்மை வணிக வாரியங்கள் குறித்த செய்திகளின் தொகுப்பு | வேளாண் வளர்ச்சிக்காக தமிழகம் எடுத்துள்ள செயல்திட்டங்கள் வாரியங்கள் பற்றிய அறிவைப் பெறுவர்<br>வேளாண்மை சார்ந்த பிற தொழில் அறிவைப் பெறுவர்<br>வேளாண் வணிகத்தை தற்கால வணிகத்துடன் தொடர்பு படுத்தும் அறிவைப் பெறுவர் |
| | துணைப்பாடம் | வணிகம் வகைமைகள் கட்டுரை | கட்டுரை வாயிலாக வணிகம் பற்றிய வகைமைகளை தெரிந்து கொள்ளல் |
| | இலக்கணம் | வாக்கிய வகை / பொருள்கோள் | வாக்கிய அமைப்புகளைப் பற்றியும் பொருள்கோள் பற்றிய அறிய செய்தல் |

| பொருண்மை | இயலமைப்பு | பாடப்பொருள்/ பாடவடிவம் | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|---|
| கலை / கல்வி | செய்யுள் | புறநானூறு<br>ஔவையார் தனிப்பாடல்<br>தொல்காப்பியம்<br>ஆண்டாள் பாடல்கள் | கைப்பொருளை விட கல்வியே உண்மையானது என்பதை இலக்கியங்கள் வாயிலாக உணர்வர்<br>கல்விக்காக பணியாற்றிய தமிழ் அறிஞர்கள் பற்றிய அறிவைப் பெறுதல் |
| | உரைநடை | சர் தாமசு மன்றோவின் கல்விப்பணிகள்<br>நிகழ்த்துக்கலைகள்<br>நடனம் / நாடகம் | ஆங்கிலேயர் வருகைக்கு பின்னால் தமிழக கல்வியில் ஏற்பட்ட குறிபிடத்தக்க மாற்றங்களை அறிந்து கொள்வர்<br>கடிதங்களின் வகையறிந்து பல்வேறு தலைப்பில் விண்ணப்பங்கள் எழுதும் பயிற்சி பெறுகின்றனர்<br>நிகழ்த்துக்கலைகள் மூலம் கலை மற்றும் கல்விக் கூறுகளை அறிந்து கொள்வர் |
| | துணைப்பாடம் | இதழாளர் – பாரதி | திரை விமர்சனங்கள் பேச்சிலும்,எழுத்திலும் அமைக்கும் திறன் பெறுவர் |
| | இலக்கணம் | வல்லின மிகு மிகா இடங்கள் | நிறுத்தக் குறிகளை அறிந்து வாக்கியம் படிக்க எழுத கற்பர்<br>செய்யுள் பகுதியில் வல்லினம் மிகு மிகா இடங்களை அறிவர் |

| பொருண்மை | இயலமைப்பு | பாடப்பொருள்/ பாடவடிவம் | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|---|
| நாகரிகம் / பண்பாடு | செய்யுள் | சிலப்பதிகாரம்<br>திருக்குறள்<br>நாலடியார்<br>ஔவையார் பாடல்கள் | தமிழ் இலக்கியப் பாடல்கள் வெளிப்படுத்தும் விருந்தோம்பல் பண்புகளைப் பற்றி அறிவர்<br>மறத்திலும் அறம் போற்றுபவர் நம் தமிழர்கள் என்பதை அறிந்து அதன்படி நடப்பர்<br>தமிழரின் பண்பாட்டு அடையாளங்களை அறிந்து கொள்வர் |
| | உரைநடை | உ.வே.சா .(என் சரிதம் )<br>விருந்தோம்பல் குறித்த உரை நடைப் பகுதிகள்<br>தமிழ்க் காதல் | தயக்கமின்றி தமிழில் பேசுவோம் என்பதை அறிந்து தமிழிலேயே பேசும் திறன் பெறுவர்<br>தமிழில் கலந்துள் ள பிறமொழிச்சொற்களை கண்டறிந்து தமிழ்ப் படுத்துவர்<br>கடல் கடந்த வெற்றிச் செய்திகளை தெரிந்து கொள்வர் |
| | துணைப்பாடம் | நடுகல் வழிபாடு | நடுகல் வழிபாடு,சிறு தெய்வங்கள் வழிபாடு பற்றிய அறிவைப் பெறுவர் |
| | இலக்கணம் | பொருள் இலக்கணம்<br>புறப்பொருள் வெண்பா மாலை<br>கூறும் அடிப்படை | புறப்பொருள் இலக்கணம் மூலம் போர்ச் செய்திகள்,மற்றும் அகம் புறம் கலந்த செய்திகளை அறிவர் |

| பொருண்மை | இயலமைப்பு | பாடப்பொருள்/ பாடவடிவம் | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|---|
| அறிவியல் தொழில் நுட்பம் | செய்யுள் | கவிதைகள் | தமிழர்களின் உலகப் பொதுமை சிந்தனையை அறிந்து பின்பற்றல்<br>தமிழ் செம்மொழி என்பதையறிந்து செம்மொழியின் தகுதிப்பாடுகளை அறிவர்<br>தமிழக கட்டடக்கலையின் நுட்பங்களை ஆராய்ந்து பிற கட்டடக் கலையுடன் ஒப்பிடுவர்<br>தற்கால தமிழ் வளர்ச்சியை முற்கால தமிழுடன் ஒப்பிடும் அறிவைப் பெறுவர் |
| | உரைநடை | கப்பல் கட்டும்<br>கணினித் தமிழ்<br>தமிழ் செம்மொழி சார்ந்த கட்டுரைகள் | தமிழர்களின் உலகப் பொதுமை சிந்தனையை அறிந்து பின்பற்றல்<br>தமிழ் செம்மொழி என்பதையறிந்து செம்மொழியின் தகுதிப்பாடுகளை அறிவர்<br>தமிழின் கப்பல் கட்டும் கலைப் பற்றிய அறிவைப் பெறுவர் |
| | துணைப்பாடம் | அறிவியல் கட்டுரை | தமிழ் அறிவியல் செய்திகளை குன்றக் குடி அடிகளாரின் அறிவியல் பார்வை மூலம் அறிந்து கொள்வர் |
| | இலக்கணம் | பொருள் இலக்கணம்<br>திணை இலக்கண கூறுகளைச் செய்யுளில் இனங்காணுதல் | திணை இலக்கண கூறுகளைச் செய்யுளில் இனங்காணும் அறிவைப் பெறுவர் |

| பொருண்மை | இயலமைப்பு | பாடப்பொருள்/ பாடவடிவம் | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|---|
| அறம் / தத்துவம் /சிந்தனை | செய்யுள் | சிவவாக்கியார்<br>மாணிக்க வாசகர் பாடல்<br>புற நானூறு | தமிழர்களின் அறச்சிந்தனையை அறிந்து பின்பற்றல்<br>சிவவாக்கியார் ,மாணிக்க வாசகர் பாடல் ,புற நானூறு கூறும் அறம் / தத்துவம் /சிந்தனைகருத்துக்களை அறிந்து பின்பற்றுவர்<br>மரபுக்கவிதைகளில் இடம்பெற்றுள்ள தத்துவ சிந்தனைகளை பெறுவர் |
| | உரைநடை | தமிழர் அறிவுக் கோட்பாடு | தமிழர்களின் அறிவுக் களஞ்சிய சிந்தனையை அறிந்து பின்பற்றல்<br>குறிப்புகள் கொண்டு உரையாற்றும் சிந்தனைப் பெறுவர் |
| | துணைப்பாடம் | அர்த்த சாஸ்த்திரமும் திருக்குறளும் | வள்ளுவர் ,கேளடில்யர் காட்டும் அறம் , தத்துவம்,சிந்தனை கூறுகளை உரையாடல் மூலம் அறிந்து கொள்வர் |
| | இலக்கணம் | யாப்பிலக்கணம்<br>செய்யுள் வகைகள்<br>வெண்பா , ஆசிரியம்<br>குறள் – அலகிட்டு வாய்ப்பாடு கூறல் | செய்யுள் வகை ,பாவகைகள் பற்றிய அறிவைப் பெறுவர்<br>செய்யுளின் ஆழ்நிலை கருத்துக்களை இலக்கண அடிப்படையில் அறிவர் |

| பொருண்மை | இயலமைப்பு | பாடப்பொருள்/ பாடவடிவம் | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|---|
| மனிதம் ஆளுமை | செய்யுள் | சீறாப்புராணம்<br>மூன்றாம் பாலினம் குறித்த நவீன கவிதைகள்<br>திருக்குறள் | இலக்கியங்கள் வாயிலாக மனித நேயம் /ஆளுமை சார்ந்த கூறுகளை தெரிந்து கொள்வர்<br>மூன்றாம் பாலினத்துவருடன் உள்ள பண்புகளை அறிந்து சமூகத்தில் மனிதமும் மாண்பையும் பின்பற்றல் |
| | உரைநடை | தேயிலைத்தோட்ட தொழிலாளர்கள் பற்றிய கட்டுரை | தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மூலம் மனிதம் சார்ந்த கூறுகளை அறிந்து வாழ்க்கையி பின்பற்றுவர் |
| | துணைப்பாடம் | தந்தை தாய் பேண்<br>சிகிச்சை<br>ஆவணப்படம் | தந்தை தாய் பேண் இல்லங்களை இக்கால சமூகத்திற்கு புகுத்த விடாமல் செய்து கூட்டுக்குடும்பம் நெறிக்கு மாற்றுவர்<br>மருத்துவ சிகிச்சைகளில் மனித நேயக் கருத்துகளை அறியச் செய்தல் |
| | இலக்கணம் | அணி இலக்கணம்<br>5 வகைகள் மட்டும்<br>படிமம் ,குறியீடு , இருண்மை | அணி இலக்கணம் மூலம் மறைபொருள் இலக்கண அறிவைப் பெறுவர்<br>மறைபொருளுக்குள் பொதிந்து இருக்கும் படிமம் ,குறியீடு ,இருண்மை கூறுகளின் பொருள் அறிவர் |

| பொருண்மை | இயலமைப்பு | பாடப்பொருள்/ பாடவடிவம் | கற்றல் வெளிப்பாடுகள் |
|---|---|---|---|
| மனிதம் ஆளுமை | செய்யுள் | பின் நவீனத்துவ கவிதைகள் | பாடப்பகுதியில் உள்ள செய்யுளின் வடிவம் உள்ளடக்கம் உணர்ச்சி ஆகியன் பற்றி வெளிப்பட்டுள்ள தன்மையை அறிவர்<br>இலக்கிய கோட்பாடுகள் பற்றிய தொடக்க அறிவு பெறுவர்<br>கவிதைகளில் முரண் அமைக்கும் திறன் பெறுவர் |
| | உரைநடை | பின் நவீனத்துவ கட்டுரைகள் | மரபு வழிக் கட்டுரைகளையும் நவீனத்துவ கட்டுரையின் வேறுபாடுகளை அறிவர்<br>வரவேற்பு மடல்களில் பின் நவீனத்துவ அடிப்படையில் எழுதும் ஆற்றல் பெறுவர் |
| | துணைப்பாடம் | நவீனத்துவ கவிதைகள் – தற்கால முற்காலம் பட்டிமன்றம் | நவீனத்துவ கவிதைகள் – தற்கால முற்காலம் பட்டிமன்ற மூலம் சிந்தனை , எழுத்து, பேச்சாற்றல் பெறுவர் |
| | இலக்கணம் | தமிழ் இலக்கணத்திலும் ஆங்கில இலக்கணத்திலும் இடம் பெறும் ஒற்றுமையும் வேற்றுமையும் | தமிழ் இலக்கணத்திற்கும் ஆங்கில இலக்கணத்திற்கும் இடம் பெறும் ஒற்றுமையும் வேற்றுமையும் அறிந்து பயன்படுத்துவர் |